# அண்ணாவின் பட்டமளிப்பு விழா உரைகள்



அ ப செ

பேரா. அ. கி. மூர்த்தி

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# அண்ணாவின்
# பட்டமளிப்பு விழா
# உரைகள்

பேரா. தஞ்சை **அ.கி.மூர்த்தி,** எம்.ஏ.

அல்லி பதிப்பகம்
*123/8, பாண்டியன் நிழற்சாலை,*
*புது அங்காடித் தெரு, சூளைமேடு நெடுஞ்சாலை,*
*சென்னை – 600 094*

# நூல் விவர அட்டவணை


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | அண்ணாவின் பட்டமளிப்பு விழா உரைகள் |
| பொருள் | - | பேச்சுக்கலை |
| ஆசிரியர் பெயர் | - | பேரா. அ.கி. மூர்த்தி |
| பதிப்பாண்டு | - | முதல் பதிப்பு1999 |
| பதிப்பாளர் | - | அல்லி பதிப்பகம், சென்னை - 600 094. |
| உரிமை | - | கி. செம்மல், எம்.ஏ. |
| மொழி | - | தமிழ் |
| நூலின் அளவு | - | கிரௌன் |
| தாள் | - | 10.9 kg. |
| கட்டமைப்பு | - | அட்டைக் கட்டு |
| அச்செழுத்து | - | 10 pt |
| மொத்தப் பக்கங்கள் | - | 64 |
| விலை | - | ரூ.10.00 |
| அச்சிட்டோர் | - | ராயல் கிராபிக்ஸ், செ-24. |
| கணிப்பொறி அச்சு | - | திருவள்ளுவர் வரைகலையகம் சென்னை - 94. ✆ 472 22 05 |

# முன்னுரை

தமிழ் பேச்சுலகில் விடிவெள்ளியாகத் திகழ்ந்தது மட்டுமன்றி, அனைத்து வகையினரையும் ஈர்க்கும் வகையில் பேசிய ஒரே பேச்சாளர் பேரறிஞர் அண்ணா. கவின்மிகு கருத்துச் செறிவும் ஒன்றையொன்று விஞ்சும் பல வகை நயங்களும் கொண்டவை அவர்தம் பேச்சுகள். அவை தொகைவகை செய்து வெளியிடப் பெறச் சீரிய திட்டமிடப்பட்டுள்ளது.

ஆராய்ச்சியாளர்கள், திறனாய்வாளர்கள், வாசகர்கள் ஆகிய மூவகையினருக்கும் பயன்படும் வகையில் அவை வெளியிடப்பெறும்.

இத்திட்டத்தில் அண்ணாவின் பட்டமளிப்புவிழா உரைகள் என்னுந் தலைப்பில் முதல் நூல் இப்பொழுது வெளியிடப் பெறுகிறது. இதனைத் தொடர்ந்து பல நூல்கள் வெளிவரும்.

அண்ணா ஆற்றிய பட்டமளிப்பு விழா உரைகள் மூன்று. அவற்றில் அண்ணாமலைப் பல்கலைக்கழக உரை ஆங்கிலத்தில் ஆற்றப்பெற்றது. அப்பேருரை அண்ணாவின் நடையிலேயே மொழியாக்கம் செய்யப் பெற்றுள்ளது. மேலும், சென்னைச் சமூகப் பணிப்பள்ளியிலும் மதுரைப் பல்கலைக் கழகத்திலும் அண்ணா ஆற்றியவை தமிழ் உரைகளே. இந்நூல் இம்மூன்று உரைகளோடு நிறைவுபெறுகிறது. இத்தமிழ் வெளியீட்டுத் திட்டம் வெற்றிபெற, அண்ணாவின் அன்பர்களும் வாசகர்களும் தங்கள் நல்லாதரவினை நல்கப் பணிவுடன் வேண்டுகின்றேன்.

அண்ணாவின் அறிக்கைகள் நான்கு பிற்சேர்க்கையாகச் சேர்க்கப்பட்டிருப்பது இந்நூலுக்குரிய தனிச் சிறப்பாகும்.

> "காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
> ஞாலத்தின் மாணப் பெரிது"

சூளைமேடு,
சென்னை - 94.

பேரா. அ.கி. மூர்த்தி

# அண்ணாவின் பேச்சு - ஓர் ஆய்வு

## 1. பொருள்

இந்நூலின்கண் உள்ள மூன்று உரைகளும் மன்பதை போற்றும் பேச்சுக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். முதல் உரையினைத் தவிர, ஏனைய இரண்டும் தயாரிக்கப்பட்டவையே. இவற்றில் தமக்கே உரித்தான முறையில் அண்ணா பல பொருள்கள் பற்றி விரிவாகப் பேசுகின்றார்.

எங்கிருந்தாலும் ஆற்றுக சமூகப் பணி என்னும் முதல் உரையில் முழு ஈடுபாடுள்ள சமூகத்தொண்டன் என்னும் வகையில் சமூக முன்னேற்றத்திற்குச் சமூகப்பணி இன்றியமையாதது என்பதை அண்ணா வலிவாக வற்புறுத்திச் சமுதாயச் சீர்த்திருத்தம் சமூகச் சேவையிலிருந்து குறிப்பிடத்தகுந்த வகையில் வேறுபட்டது என்பதைத் தெளிவுப்படுத்துகிறார். பட்டம் பெறுவோரை எங்கிருந்தாலும் உண்மைச் சமூகத் தொண்டு ஆற்றவேண்டும் என்றும் அவர் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறார்.

பல்கலைக்கழகம் பறைசாற்ற வேண்டியவை என்னும் இரண்டாம் உரையிலும், பல்கலைக்கழகத்தின் தலையாய பணி என்னும் மூன்றாம் உரையிலும் தமிழர்களின் புகழ்மிகு பழங்கால வரலாற்றினை நெஞ்சு நெக்குருக அவர் பேசுகின்றார். இலக்கியத்துறையில் நம் செயல்கள் அரியவை எனவும் புகழ்கின்றார். அடுத்துத் தமிழ் இலக்கியங்களின் உலகளாவிய செய்தியினை அவையோருக்கு அவர் அறிவிக்கின்றார்.

நாடு விடுதலை பெறுவதற்குமுன், கருத்து உரிமையிலும் வெளியீட்டிலும் நம்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களிலிருந்து வேறுபட்டதை அவர் முனைப்பாகச் சுட்டிக் காட்டுகின்றார். பொதுவாகப் பல்கலைக்கழகங்களின் பணிபற்றியும் சிறப்பாக அண்ணாமலை, மதுரைப் பல்கலைக்கழகங்களின் பணி பற்றியும் அண்ணா குறிப்பிடுகின்றார். முதற்கண் கருத்துரிமை பல்கலைக்கழகங்களின் தனி உரிமையாகும் என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றார்.

பல்கலைக்கழகங்கள் அறிவுக் கருவூலங்கள் என்றும், எண்ணம், அறிவு, தொண்டு ஆகியவற்றைப் பரப்பும் திருத்

தூதரகங்கள் என்றும் அவர் குறிப்பிடுவது கருத்திற் கொள்ளத்தக்கது.

அண்ணா கருத்திற்கேற்பப் பல்கலைக்கழகக் கல்வி என்பது பல்வேறு நாடுகளும் பேணிப் போற்றும் சிறந்த எண்ணங்களின் பொழிவேயாகும். அறிவு நோக்கு, பணிநோக்கு, பொருள் தேடும் நோக்கு என்பன பல்கலைக்கழகங்களின் மூவகை நோக்குகளாகும். இவற்றில் பணி நோக்கினையே அண்ணா பெரிதும் போற்றுகின்றார். ஏனெனில், நாட்டுத் தொண்டிற்காகத் தம் வாழ்வையே ஒப்படைத்த பெருந்தகை அவர்.

நடுநிலையுள்ளம், சிறப்புள்ளவற்றையும் சிறப்பில்லாதவற்றையும் வேறுபடுத்தி அறியுந்திறம், அச்சமோ அயர்வோ இன்றி, ஒரு சிக்கலை அதன் எல்லாக் கோணங்களிலும் பார்க்குந்திறன், மற்றவர் கருத்தை மருட்சியில்லாமல் ஏற்கும் மனப்பாங்கு ஆகியவை பல்கலைக்கழகங்களின் மாற்ற இயலா அடிப்படை இயல்புகளாகும் என்பதும் அவர்தம் துணிபு. தவிரப் பல்கலைக்கழகங்களின் தலையாய பணி அறிவாற்றலைப் பெற விரும்புவோருக்கு அதனை அதன் உண்மையான அளவிலும் நோக்கிலும் அளிப்பதும் உலகின் குறிக்கோள்கள் கருத்துகள் ஆகியவற்றின் தனியாண்மையைக் காப்பதுமாகும்.

இன்று நம்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் தலையாய பணி பெரிதும் புறக்கணிக்கப்பட்ட பாமரனைக் கணக்கில் கொண்டு, அவனை மக்களாட்சிக்குப் பயன்படும் வகையில் உருவாக்குவதேயாகும்.

அண்ணாமலை, மதுரைப் பல்கலைக்கழகங்களுக்கு இதனைத் தவிரத் தனிப்பணி ஒன்றும் உண்டு. தமிழின் வீரவரலாறு, இலக்கிய அருஞ்செயல்கள் ஆகியவற்றை உலகுக்கு அறிவிப்பதும், தமிழ்ப் பண்பாடும் நாகரிகமும் உலகில் உரிய இடத்தைப் பெறச் செய்வது அத்தனிப் பணியாகும்.

அஞ்சாமை, உண்மை, விரிந்த மனப்பான்மை, மரியாதை, பொறுமை முதலிய நற்பண்புகளைப் பேணிக்காக்குமாறு பட்டம் பெறும் மாணவர்களை அண்ணா வேண்டுகின்றார். அறிவுப் புரட்சியிலும், சமூகச் சீர்திருத்தத்திலும் தளர்வின்றி ஈடுபட்டு, நாட்டை வளப்படுத்த வேண்டுமென்றும் அவர்களை அண்ணா வேண்டுகிறார்.

மாணவர்களின் ஒழுங்கின்மை, பயிற்றுமொழி,

இணைப்புமொழி, தேசிய ஒருமைப்பாடு, சமூகச் சீர்திருத்தம், பொருளாதாரச் சமன்பாடின்மை முதலிய சிக்கல்களையும் இடையிடையே தீர்க்கும் தம் தீர்வுகளையும் கூறுகின்றார்.

மேற்கூறிய எல்லாச் சிக்கல்களுக்கும் கலந்துரையாடல் வாயிலாகத் தீர்வுகாணும் சிறந்த மாமன்றம் பல்கலைக்கழகமே என்பதும், இதில் மாணவர்களுக்குச் சிறந்த பங்குண்டு என்பதும் அண்ணாவின் முடிந்த முடிபாகும்.

## 2. பண்புகள்

விழுமிய பேச்சின் எல்லா உயரிய பண்புகளையும் அண்ணா உரைகள் பெற்றுள்ளன. சுருக்கமான இனிய முன்னுரையோடு தொடங்கி, விறுவிறுப்பாகவும் தொடர்ச்சியாகவும் அவை வளர்ந்து செல்கின்றன. அழகிய வருணனைகள், முத்தான மேற்கோள் மொழிகள், உலகளாவிய செய்தி, நாட்டின் சிக்கல்களுக்கரிய நல்ல தீர்வுகள் முதலியவை அவர் தம் உரைகளில் ஒளிர்கின்றன. அவை பொருத்தமான நற்செய்தியோடு முடிவடைகின்றன. தவிர நாட்டுப்பற்று, வீரவுணர்வு, மனிதாபிமானம், அமைதி நாட்டம் ஆகியவையும் அவற்றில் மிளிர்கின்றன. அறிவார்ந்த அணுகுமுறை, முதிர்ந்த பகுப்பாய்வு ஆகியவையும் அவற்றில் எடுப்பாக உள்ளன. ஆற்றொழுக்கு, சொல்விரைவு ஆகியவையும் குறிப்பிடத்தக்கவையே. உயரிய வழக்காறுகளும் பண்பாடுகளும் நன்கு மதிக்கப்படுகின்றன. இயல்பான நகைச்சுவை, நயமொழி, பரந்த மனப்பான்மை, விரிந்த நோக்கு ஆகியவையும் அவர்தம் உரைகளில் பளிச்சிடுகின்றன.

## 3. நடை

பேச்சுக்கலையில் ஈடு இணையற்றவர் பேரறிஞர் அண்ணா. தம் பேச்சு பெருமயுற எல்லா வகை இலக்கிய நயங்களையும் அவர் கையாளுகின்றார். உவமை, உருவகம், அடுக்குமொழி, சொல்திறம், மேற்கோள் மொழிகள் முதலியவை அந்நயங்களாம். உவமையும் உருவகமும் அடுக்கு மொழியும் மேற்கோள்களும் அண்ணாவின் உரைகளிலிருந்து பிரிக்க இயலாதவை.

அண்ணாவின் மொழி, வனப்பும் வண்ணமும் வீறும் உடையது. தம் ஆழ்ந்த படிப்பால் வியத்தகு முறையில் அவர் மொழியினைக் கையாளுகின்றார். உரைகள் முழுவதும் வற்றாக்

கற்பனை வளம் ததும்பியுள்ளது. அறிவார்ந்த அவையோருக்குப் பேசுவதால், அண்ணா கவிதைச் செறிவுள்ள உயரிய நடையினைப் பயன்படுத்துகின்றார். அவர் நடையில் ஆழ்ந்த அறிவாண்மையும் போற்றுதற்குரிய பெருமித உணர்வுப் பெருக்கும் வெளிப்படுகின்றன.

பழுத்த அறிவு, கூரிய அறிவுநுட்பம், அகன்ற காட்சியறிவு ஆகியவை அவர்தம் நடையினை அணிசெய்கின்றன. அதில் அவர் தம் ஆளுமையும் முனைப்பாகப் புலப்படுகின்றது. கருத்து முதன்மையும் முழுமையும், கருத்து வெளிப்பாட்டு விழுப்பமும் அவர்தம் நடையின் தலைசிறந்த பண்புகள் எனலாம். சுருக்கம், தெளிவு, இனிமை, ஓசைநயம், அறிவாழம் முதலியவை அவர் தம் நடையின் ஏனைய பண்புகளாம். முடிவாகக் கூறுமிடத்து, அவர் தம் நடை ஒரு தனி வீறும் தனியாண்மையும் கொண்டது எனலாம்.

அஃதே அண்ணாவின் நடை.


பேரா. ஆகி. மூர்த்தி

# பொருளடக்கம்


| | |
|---|---|
| | பக்கம் |
| 1. எங்கிருந்தாலும் ஆற்றுக சமூகப்பணி | 1 |
| 2. பல்கலைக்கழகம் பறைசாற்ற வேண்டியவை | 2 |
| 3. பல்கலைக்கழகத்தின் தலையாய பணி | 17 |



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அண்ணா
பட்டமளிப்பு விழாப் பேருரை ஆற்றுதல்



ஏல் பல்கலைக் கழகத்தில் அமெரிக்க மாணவர்
களுக்கு அண்ணா திருக்குறள் பாடஞ்சொல்லுதல்

# 1. எங்கிருந்தாலும் ஆற்றுக சமூகப்பணி!

இந்த விழாவில் கலந்து கொள்வதில் நான் மெத்த மகிழ்ச்சி அடைகின்றேன். உங்களை எல்லாம் பாராட்டி விட்டுப் போகலாம் என்பதற்காக மட்டும் நான் வர வில்லை. இச்சமூகப் பணிப்பள்ளியின் அமைப்பாளர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துச் செல்லவும் வந்திருக் கிறேன்.

கிளப்வாலா ஜாதவ் அம்மையாரால் தோற்றுவிக்கப் பட்ட இந்த நிறுவனம் சீரிய முறையில் செயல்படும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு

நாட்டின் எதிர்காலத்தை ஒளிமயமானதாக்கும் பொறுப்பு இளைய தலைமுறையினருக்கு உண்டு. சமுதாயப் பணி களிலும் தொண்டுகளிலும் இளைஞர்கள் காட்டும் அக்கறையும் மேற்கொள்ளும் பொறுப்புக்களும் நாட்டின் வாழ்வை மலரச் செய்யும்.

சமுதாயச் சீர்திருத்தம் வேறு. சமூகச்சேவை வேறு. சமுதாயச் சீர்திருத்தம் சில எதிர்ப்புகளைத் தேடித்தரும். ஆனால் சமூகச் சேவை அப்படிப்பட்டதல்ல.

நம் நாட்டு மீது விரிக்கப்பட்டிருக்கும் அறை கூவலை எதிர்த்துப் பணியாற்றுவதில் இளைஞர்களுக்கு முக்கிய இடமுண்டு.

நம்முடைய நாடு பிற்பட்ட நாடல்ல. தனிப்பட்ட வீறுடைய நாடாக விளங்குகிறது தத்துவத்தில் சிறந்த நாடாக உள்ளது. இருந்தாலுங்கூட இங்குக் கல்லாமையும் அதிகமாக இருக்கிறது.

மருத்துவத்தில் சிறந்த அறிவாளர்கள் இங்கே இருக்கிறார்கள். இருந்தாலுங்கூட இங்கே தவிர்க்க முடியாத பிணிகளும் உண்டு.

நல்ல உற்பத்தியும் உண்டு. இருந்தாலுங்கூடப் பங்கீட்டு முறையும் இருக்கிறது.

இப்படி எதில் எடுத்தாலும் 'இருந்தாலுங்கூட' என்று சொல்லும் நிலையில் நாடு உள்ளது. இந்த நிலை மாற வேண்டும்.

விருப்பமான துறைகளில் ஈடுபடவிருக்கும், பட்டம் பெற்ற மாணவர்கள் தங்களது சமூகச் சேவையை எங்கிருந்தாலும் செய்ய வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறேன்.

வகைப்பாடு : கல்வி—சமூகப்பணி.

[21—4—67 அன்று சென்னைச் சமூகப் பணிப் பள்ளியின் பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரை].

# 2, பல்கலைக்கழகம் பறைசாற்ற வேண்டியவை

1

ஆளுநர் அவர்களே, இணை வேந்தர் அவர்களே, துணை வேந்தர் அவர்களே, பேராசிரியப் பெருமக்களே, இன்று பட்டம்பெற வந்துள்ள இளந்தோழர்களே.

மதுரைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தும் வாய்ப்பினைப் பெற்றமைக்குப் பேருவகை கொள்கின்றேன்.

இப்பல்கலைக்கழகம் தொடங்கி ஓராண்டே ஆகிறது. இதுவே முதல் பட்டமளிப்பு விழாப் பேருரையாகும். இந்த வாய்ப்பு நான் பெற்றிடச் செய்த பல்கலைக்கழகப் பெரியோர்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் மாடக்கூடலில் நிற்கின்றேன். நானிலம் போற்றிடும் தனிச்சிறப்பினைப் பெற்றுத் தமிழகத்தின் அறிவுக் கோட்டமாய்த் திகழும் மதுரையம்பதியில் எழுச்சி பொங்கிடும் நிலையில் நிற்கின்றேன்.

இங்கு நின்றிடும் எவருக்கும் அன்றொருநாள் அறிவாளர் அரணளிக்க அரசாண்ட பாண்டியப் பெருமன்னர் தமிழ் வளர்த்துத் தமிழர்தம் தனிச் சிறப்பினைக் காத்துப் புகழ்க் கொடி நாட்டித் தரணிமெச்சக் கோலோச்சி வந்த வரலாற்று நினைவு எழாமலிருக்க இயலாது. நெஞ்சு நெக்குருகும் நினைவலைகள் எழுந்தாடச் செய்யும்.

இன்று, நான் இங்கு நின்று, பட்டச்சிறப்புப் பெற்றிட வந்துள்ளோரையும் பெரும் பேராசிரியர்களையும் கண்டு களித்திடுகின்றேன். இங்கன்றோ அந்நாளில் பாண்டியப் பேரரசர் சங்கப் புலவருடன் அளவளாவி அறிவுப் புனலாடி அகமகிழ்ந்திருந்தனர் என்பதனை எண்ணுகின்றேன். இன்பத்தேன் சுவை நுகர்கின்றேன்.

மனக்கண்ணால் காணுகின்றேன்: முதுபெரும் புலவர்கள் அவைநோக்கி; முந்நூறுகல் தொலைவினின்றும் மூதறிஞர்; காணீர் தமிழ் நெறியை—தரணியோர் மெச்சி ஏற்றிடத் தக்கதோர் நன்னெறியை—ஈரடியில் யான் இயற்றியுள்ள சீரடியை என்றுரைத்த வண்ணம் திருவள்ளுவனார் வந்திடும் காட்சியினை.

தத்தமது ஏடுகளை வித்தகர் போற்றிடத்தக்கவென விளக்கிப் புலவர் பெருமக்கள் பேருரையாற்றிய பெருமிதமிகு காட்சியெல்லாம் காணுகின்றேன். காணாதார் எவருமிரார்.

எத்தகைய அறிவாற்றல், என்னென்ன திறனாய்வு இங்கிருந்தன அற்றை நாளில்!

இந்தக் கவிதை எம்மான் இயற்றியது என்றியம்பிய சொற் கேட்டும், நெற்றிக்கண் காட்டினாலும் குற்றம் குற்றமே என்றுரைத்த அரிமாப் பெரும் புலவர் நக்கீரர் தெரிகின்றார். நந்தமிழர் கொண்டிருந்த மாண்பு தெரிகின்றது.

"அச்சம் தவிர்த்திடுக. நவநிதியந் தந்திடினும் நத்திக்கிடந்திட இசையாதீர். வாய்மைதனைக் காத்திடும் வன்மைதனைப் பெற்றிடுக. அதற்காக நெருப்பாற்றில் நீந்திடவும் துணிந்திடுக. யாந்தமிழர் என்பதனை மெய்ப்பித்திடுக", என்றன்றோ அந்நாள் நிகழ்ச்சி நமக்கெல்லாம் ஆணையிடக் காண்கின்றோம்.

இந்தத் திருநாட்டில் பிறந்திட்ட நாமெல்லாம் ஆன்றோர் அமைத்தளித்த அருமரபுகளைக் காத்தல் நீங்காத நற்கடமை என்பதனை உணர்கின்றோம்.

"ஏறுநடை போட்டிடுக. ஏற்றமிகு நிலையதனை இந்நாடு பெற்றிடவே உமதாற்றல் பயன்படட்டும்" என்றெல்லாம் புலவர் பெருமக்கள் கூறிநிற்கின்றார்கள். காண இயலவில்லை, கேட்கின்றோம் அவ்வுரையை.

பாண்டிய நாடிதற்குப் பாங்களித்த மாமதுரை. தமிழ் மரபு காத்திட்ட மன்றங் கண்ட மதுரை. தேமதுரத் தமிழோசை திக்கெல்லாம் எழச்செய்த திருமதுரை. வீரப் போராற்றலால் மட்டுமன்றி, அறிவுக்கணை தொடுத்த மாண்பினாலும் பெருமைதனைப் பெற்ற வெற்றிக் கோட்டம்.

"அந்த நாளும் வந்திடாதோ!" என்னும் உணர்ச்சியால் எவரும் உந்தப்படும் நிலைபெறுவர் மாமதுரைப் பதியின் வரலாற்றுச் சிறப்பறியின்.

ஆம்! ஆயின், ஏக்கம் நமக்கெதற்கு? அந்நாட் சிறப்பினை இந்நாளும் கண்டிடலாம். இவரெலாம் அதற்கே ஒப்படைத்துள்ளார்கள். இவராற்றல் துணை கொண்டு தமிழ் மரபும் தமிழ் மாண்பும் என்றும் ஒளிமயமாய்த் திகழ்ந்திடச் செய்திடலாம் என்றோர் உறுதியினைப் பெறுகின்றேன்; பெற்றிடச் செய்கின்றீர்!

பெரும் புலவர்களாம் நீவிர்! பட்டமளிப்பு விழாவினிலே பாங்குடனே வந்துள்ள அறிவரசராம் நீவிர். உமக்கென்ன உரைத்திட உளது? உம் உள்ளம் அஃதறியும். உமது பெரும் பேராசிரியர் கருத்து அளித்துள்ளார். என் கடன் நீரறிந்ததனை மீண்டும் நினைவுப் படுத்துவதேயாகும்.

## 2

பட்டம் பெற்றிடுகின்றீர்! பல்கலையில் வல்லுநர் ஆகின்றீர், பல்கலைக் கழகம் ஈன்றெடுத்த நன்மணிகளாகின்றீர். ஆம்! ஆயின், இது முடிவா தொடக்கமா? அஃதே கேள்வி.

பட்டம் பெற்றுள்ளீர், பாராட்டுக்குரியீர். ஐயமில்லை. ஆயின், பட்டம் எதற்கு? காட்டிக் களித்திடவா? அன்றிப் பணி செய்திடக் கிடைத்திட்ட ஆணையெனக் கொண்டிடவா? நுமக்கா? நாட்டுக்கா? பொருள் ஈட்டிடவா? நாட்டுப் பெருமையினைக் காத்திடவா? எதற்கு இப்பட்டம் பயன்பட இருக்கிறது? அஃதே கேள்வி. விழா தந்திடும் மகிழ்ச்சியுடன் இழைந்து நம் செவி வீழ்ந்திடும் கேள்வி.

தானுண்ட நீரதனைப் பன்மடங்கு பெருக்கிப் பார் மகிழத் தருவதற்கே, சூல்கொண்டுலவுவது மேகம், அறிகின்றோம்.

தன் தோகைதனை விரித்துக் கலாபமயில் ஆடுவது தானே கண்டுகளித்திடவா? இல்லை. பிறர்காண, பிறர் மகிழ.

தான் காத்து வைத்துள்ள பொற்குவியல்தனைக் கொண்டு தானேயா அணிகலனைச்செய்து நிலமாது பூட்டிக்கொள் கின்றாள்? இல்லை, மற்றையோர் பெற்றிடத் தருகின்றாள்.

ஒளிதனை உமிழ்ந்திடும் திருவிளக்கு எதற்காக? இருளில் உள்ளோர் இடர் நீக்க.

பட்டம் பெற்றிடும் சிறப்புடையீர்! நீவிர் திருவிளக்கு, பொற்குவியல், புள்ளிக் கலாப மயில், கார்மேகம், நாட்டைச் செழிக்கச் செய்திடும் வல்லுநர்கள். இசைபாட மக்கள் உமது ஆற்றலை ஈந்திட வந்துள்ளீர். இதற்கான அனுமதிச் சீட்டே இந்தப் பட்டங்கள். இத்தகையோரைப் பயிற்றுவித்துக் கொடுப்பதே பல்கலைக்கழகத்தின் தனிச்சிறப்பு.

நாட்டின் பொதுவுடைமை நீவிர்! இன்று நமக்கென்று பெற்றுள்ள நற் பட்டங்கள் மறந்திடுவோர் அல்லர் நீவிர். எனினும், எடுத்துரைக்க வந்துள்ளேன், இயம்புகின்றேன்.

எந்நாடாயினும் இடரினும் இழிவிலும் படாமல் இருள கன்று ஏற்றம் பெற்று இருந்திட வேண்டுமெனில், அந்நாட்டினில் தொடர்தொடராய் அறிவாளர் தோன்றிய வண்ணம் இருந்திட வேண்டும். நன்றிது, தீதிது, நமதிது, பிறர் தந்ததிது, மரபிது, மருளிது என்பதனை ஆய்ந்தறிந்து கூறுவதற்கும், அவ்வழி நடந்து மக்கள் மாண்பினைப் பெற்றிடச் செய்வதற்கும் ஆற்றல்மிக்க அறிவுப்படை எழுந்தபடி இருக்க வேண்டும். அதற்கான பயிற்சிக்கூடம் வேறெதுவாய் இருந்திடமுடியும்? இஃதே அப்பயிற்சிக்கூடம், பல்கலைக் கழகம். நாடு பல்வளமும் பெற்றிடும் நற்கலையைக் கற்றிட அமைந்துள்ள நக்கீரக்கோட்டம்

1964—66 ஆம் ஆண்டுத் தேசியக் கல்விக்குழுவினர் இதனை வலியுறுத்திக் கூறியுள்ளனர். எவருக்கும் கட்டுப் படாமல், இழுப்பார் பக்கம் சாய்ந்துவிடாமல் சிந்தித்து உண்மையறிந்து, அறிந்ததனை விளக்கமுடன் எடுத்துரைத்து ஆளடிமையாகாமல் அச்சமற்று நிற்போரை அளிப்பதற்கே பல்கலைக் கழகம் என்னும் கருத்துப்பட அக்குழுவினர் கூறியுள்ளனர்.

"ஆய்ந்தறிதல் வேண்டும் அதற்கேற்ற அஞ்சாமை வேண்டும். இன்றேல் சிந்தனையைச் சிறையிலிட்டுக் கொடுமையினைக் கோலோச்சச் செய்வதற்கு உடந்தையாகிவிடுவோம்" என்றுரைக்கின்றார், எச்சரித்திருக்கின்றார் பெர்ட்ராண்டு ரசல் எனும் பெருமகனார்.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் இங்கமர்ந்திருந்த புலவோர்கள் கூறிச்சென்றார்கள். இவை போன்ற ஏற்றமிகு நல்லுரைகள் பற்பலவற்றை. இடையில் அவை மறந்தோம், அல்லலுற்றோம். இன்று அவனியின் பிற பகுதியிலுள்ள ஆன்றோர் அதனை அறிவிக்கின்றார். நமக்குண்டு அந்தக் கருவூலம் நெடுங்காலமாக என்பதனை அறிகின்றோம். நானிலம் இதனை அறியச் செய்திடும் தொண்டு புரிந்திட உறுதி கொள்கின்றோம்.

3

பட்டம் பெற்றிடும் இத்திருநாள் உவகை பெற்றிடும் விழா நாள். ஐயமென்ன? ஆயினும், உவகை பெற்றிட மட்டுமே அமைந்ததன்று, உறுதிகொண்டிடவும் உள்ளதோர் நன்னாள். நாட்டைக் காத்திடும் நல்ல பணிக்கு நம்மை நாமே ஒப்படைத்திருக்கின்றோம் என்பதனை உணரும் நாளே இந்நாள்.

மதுரைப் பல்கலைக்கழகம் ஓராண்டுப் பருவத்தினிள்ளது. நூற்றாண்டு விழா நடத்தி முடித்திட்ட பல்கலைக்கழகங்கள் உள்ளன, நம் நாட்டில். பத்தோடு பதினொன்று என்னும் முறையினிலே அமைந்ததன்று மதுரைப் பல்கலைக்கழகம். தமிழரின் தனித்தேவை ஒன்றினைக் கருத்திற்கொண்டு துவக்கப்பட்டதாகும் மதுரைப் பல்கலைக்கழகம்.

நூறு ஆண்டுகளுக்கு முன்னர்ப் பல்கலைக்கழகங்கள் துவக்கப்பட்டபோது, நாடு தன்னரசு இழந்து கலைகவிழ்ந்து இருந்தது. மக்கள் மனம் வெதும்பிக் கிடந்தனர். பல்வேறு துறைகளிலே சீர்குலைவு, எங்கும் அறியாமை மட்டுமன்று, இந்நாட்டினர் ஏதும் அறிந்திடவல்லவர் அல்லர் என்னும்

எண்ணம் கப்பிக்கொண்டிருந்த நிலை. இங்கு எவரும் இதற்கு முன்னர் நினைத்துப் பார்க்கமுடியாத அறிவுக்கலைகளை மேனுட்டார் வகுத்தளிக்கின்றார் என்னும் உணர்வு மேலோங்கிய நிலையுடன் பல்கலைக்கழகம் நுழைந்தனர்.

அன்றைய நாட்களில் பயிற்சி தந்திட முனைந்தோரும் பரிதாப உணர்வுடனே பாடங் கற்பிக்க முற்பட்டனர். பிற நாட்டில் என்னென்ன கண்டனர் என்னும் வியப்புணர்ச்சிக்கே முதலிடம். நம்நாடு ஏதேது அறிந்திருந்தது என்பது பற்றிய கேள்விக்கு ஒதுக்கிடம்.

இந்நிலையில் வளர்ந்தன, பழம்பெரும் பல்கலைக் கழகங்கள். ஆண்டான், அடிமைக்கு அன்பு காரணமாக அறிவு வழங்கிடவும் வேலைக்கேற்ற ஆட்கள் பெற்றிடவும் அமைத்திட்ட இடங்கள் என்று அவை கருதப்பட்டன.

அவற்றினிலே பயிற்சி பெற்றுப் பட்டம்பெற்ற அறிவாளரில் மிகப் பலரும் நடையாலும் உடையாலும் நாட்டத்தாலும், தாம்பிறந்த நாட்டில் வாழுகின்ற வேற்று நாட்டு வடிவங்களாகத் தம்மை ஆக்கிக்கொண்டனர். அதிலே பெருமகிழ்வும் கண்டனர். நெடுங்காலம் இந்நிலை, இன்று அஃது பழங்கதை.

மதுரைப் பல்கலைக்கழகம் அடிமைத்தளை அறுத்து, ஆளுதற்கு உரிமையும் தகுதியும் பெற்றோம் நாம் என்னும் முழக்கமிட்டு விழித்தெழுந்த மக்கள் உலா வந்திடும் நாட்களிலே அமைந்துள்ளது.

"ஒளிபடைத்த கண்ணினாய் வா! வா! வா!" என்னும் பாரதியின் வீர அழைப்பு கேட்டு அணி அணியாய் வீரர்கள் திரண்டு வந்தனர். பிறகு எழுந்தது இந்தப் பல்கலைக்கழகம்.

நாட்டுக்கு விடுதலை கிடைத்தது மட்டுமின்றி, மனத்தளைகள் மெல்ல மெல்ல அறுபட்டிடும் நிலையையும் நாம் கண்டோம். அந்தச் சூழ்நிலையிலேயே இப்பல்கலைக்கழகங்

கண்டோம். சிந்தனை நமதுரிமை என்னும் குறிக்கோளுக்கான கோட்டம் இஃது என்பதனை உணர்கின்றோம்.

**4**

"எல்லாம் பிற நாடுகளிலே உள நம் நாட்டிலே ஏதும் இல்லை." என்னும் பிச்சை மனப்பான்மை செந்தொழிந்து, "எமக்கு ஈந்திடும்". என்று எந்நாட்டவரும் கேட்டுப் பெற்றிடத்தக்க ஏற்புடைய எண்ணக்குவியல் எம்மிடம் உண்டு. அது மாசுபடிந்த மணிபோல, மங்கியதோர் ஓவியம்போல உளது. மாசு துடைத்திடுவோம் மணி ஒளியைக் காட்டிடுவோம் என்று எழுச்சியுடன் கூறத்தக்க விழிப்புணர்ச்சி மேலோங்கியுள்ள காலமிது. அதனைச் செவிலித்தாயாகப் பெற்றுள்ளது இம்மதலை-மதுரைப் பல்கலைக்கழகம்.

எனவே, இதற்கென்று ஒரு தனித்தன்மை இதற்காக ஒரு தனிப்பாதை இருத்தல் வேண்டும். இந்தப் பல்கலைக் கழகம் தமிழகத்துக் கருவூலந்தன்னை உலகு காணுதற்கான வழிவகுக்கும் கோட்டமாகிப் புலிபொறித்தான், கயல்பொறித்தான், ஆரியப்படை கடந்தான், கங்கைகொண்டான், கடாரம்வென்றான் என்றெல்லாம் புகலரிக்கும் வரலாற்றினைப் படிக்கின்றோமே அதற்கொப்பக் குறளளித்தார், மேகலை ஒளி தந்தார், அகமும் புறமும் அறிவித்தனர் என்று அவனியிலுள்ள நாடுகளில் வித்தகர் மெச்சிடத்தக்க புதுவரலாறு சமைத்திடுதல் வேண்டும். அதற்கேற்ற அணிவகுப்பைத் திரட்டிடுதல் இந்தப் பல்கலைக்கழகத்தின் தனித்திறனாய் அமைந்திடுதல் வேண்டும். பாடமுறை, பயிற்சி முறை தேர்வு முறை எல்லாமே, இந்தத் தனி நோக்கம் கொண்டிடுதல் மிக நன்று. உரியவர்கள் இவைபற்றி ஆய்ந்தறிதல் வேண்டும். விருப்பம் உரைக்கின்றேன், வடிவம் கொடுத்திடும் பொறுப்பில் உள்ளோர் செய்திடுவர் எனும் ஆர்வங்கொண்டு.

அச்சம் தவிர்த்தல், ஆய்ந்தறிதல், நாட்டுநிலை உயர்த்தல், பிறநாடுகட்கு நம் தனிச்செல்வம் ஈது எனக்காட்டிடல், அளித்திடல்—இவை எமது பணி என்று கூறிடுவீர். இந்த நிலை பெற்றோம் என்பதனை அறிவிக்கும் சான்றுகளே, யாம்

பெற்றுள்ள பட்டங்கள் என்பதனைச் சொல்லாலும் செயலாலும் காட்டிடவாரீர் எனக் கனிவுடன் அழைக்கின்றேன்.

இவை ஏட்டில் படித்திட இனிப்பவை; விளக்கிப் பேசிட ஏற்றவை; வியந்து கூறிடத்தக்கவை. ஆனால், நடைமுறைக்குக் கொண்டு வருதல் எளிதன்று, தொடர்ந்து கடைப்பிடித்தல் அரிது. அதற்குத் தளரா உறுதியும் மங்காத ஊக்கமும் ஓயாத உழைப்பும், சீரான நோக்கமும் தன்னல மறுப்பும் மிகமிகத் தேவை- பல்கலைக்கழகம் இந்தப் பண்பினைத் தந்திடும், தந்துள்ளது என்று எண்ணுகிறேன். ஆம்! என்று உமது சீரிய பணியின் மூலம் மெய்ப்பிக்க வேண்டுகின்றேன்.

தேவையற்றவை, தீது தருபவை, பொருளற்றவை, பொருத்தமற்றவை — இவையெல்லாம் பழமையின் பெயர் கொண்டோ நமது உடைமை என்னும் பாசம் காட்டியோ நெளிந்திடக் கண்டபின், விட்டுவைத்திடாமல், அவற்றினை நீக்கிடும் அறப்போரினைத் தொடுத்திடுதல் வேண்டும்.

அவர் கூறியுள்ளார், ஆகவே, அஃது அறிவுடையதாகவே இருந்திடல் வேண்டும் என்று எண்ணி இருந்திடாமல்; அவர் உரைத்தது இஃது என்பதற்கு முதலிடம் தராமல், உரைத்துளது யாது என்பதற்கே முதலிடம் தந்து, உண்மையெனில், உயிர்கொடுத்தேனும் காத்திடுவோம். அன்று எனில், உயிர் போவதெனினும் எதிர்த்து நீக்கி அறிவுத்துறைப் புரட்சியிலே ஈடுபட வருமாறு பட்டம் பெற்றுள்ள நல்லோரை அழைக்கின்றேன்.

இந்நாட்டுத் தேன் எனின், கொட்டிடின் குளிர்ச்சியோ காண்போம்? பிறநாட்டுத் தேன் எனின், பருகிடிற் கசப்போ இருந்திடும்?

எங்கிருந்து கிடைத்திடினும் ஏற்புடையதெனின், எமதாக்கிக் கொள்வோம் என்னும் நோக்கம் தேவை. அதனைத் தந்திடவும் அதன்மூலம் பயன் கண்டிடவும் இணைந்து பணியாற்றிட வேண்டும்.

## 5

பல்கலைக்கழகங்கள் வளர்ந்துள்ளன, வளருகின்றன. கல்விக்கூடங்கள் பெருகி வருகின்றன. எனினும், இன்றும் மக்கள் தொகையுடன் பட்டம் பெற்றோர் தொகையினை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எத்தனை சிறிய அளவினது நமது முன்னேற்றம் என்பதனை உணரலாம். எனவேதான், நாட்டு நிலை உயர்ந்திட, நல்லோர் மிகப் பலருக்குக் கிடைத்திடா வாய்ப்பைப் பெற்றுள்ள உம்மிடம் மக்கள் நிரம்ப எதிர்பார்க்கின்றனர். நீவிர் இந்நாட்டைச் சூழ்ந்துள்ள இல்லாமை, போதாமை, அறியாமை, கயமை என்னும் படையினை வீழ்த்திடப்பாடுபடும் முன்னணிப்படையினர்.

பட்டந்தனைக் காட்டிப் பாங்கான வாழ்வுபெற முந்திக் கொள்ளும் நிலையினர் என்னும் நிந்தனையை நீக்கிடுக. நீர் வெற்றி பெற்றிடுக என வாழ்த்துகிறேன்.

பட்டம் பெற்றிடுவோர் குறிக்கோளற்றுக் கிடந்திடின் நாடு குலையும்; எதிர்காலம் எழிலுள்ளதாக அமையாது; குறிக்கோளற்ற நிலையே மனக்குழப்பம், கொதிப்பு, அதிர்ச்சி, ஆர்ப்பரிப்பு, ஒழுங்கற்ற செயல்கள், ஊறுவிளைவிக்கும் போக்கு, கலாம் விளைவித்தல், கட்டுக்கு உட்பட மறுத்தல் ஆகியவை எழக்காரணமாகிறது என்று கருதுகிறேன்.

நம் நாட்டு இளைஞர்களிடம், குறிப்பாக மாணவரிடம், கேடு நிறைந்த இயல்புகள் மிகுந்துவிட்டிருப்பதாகப் பலர் கவலை தெரிவித்துள்ளார்கள். நம் நாட்டு இளைஞர்களிடம், குறிப்பாக மாணவரிடம், நான் நம்பிக்கை இழந்துவிடவில்லை. மாறாக அவர்களின் இயல்பிலே அடிப்படையான கோளாறு எதுவும் இல்லை. அவர்முன் குறிக்கோள் சீரிய முறையிலே காட்டப்படாததாலும், அறிவுரை வழங்கிடும் அன்பர்களில் பலரும் தன்னலப் பிடியிற் சிக்கத்தான் செய்கின்றனர் என்பதைக் காண நேரிடுவதாலும் அவர்கள் இயல்பு திரிந்துவிடுகிறது, நேர்வழி அடைபடுகிறது, கேடுதரும் முறைகள் இனிப்பளிக்கின்றன என்று கருதுகிறேன். எனவே, இளைஞரும் மாணவரும் நல்லியல்புடன் இருந்திட வேண்டு

மெனில், மற்றையோர் தமது சொல்லும் செயலும் பொது நலனுக்கு உகந்ததாக அமைந்திடுமென்று பார்த்துக்கொள்வது இன்றைய அவசரத் தேவை என்பதனைக் கூறிட விழைகின்றேன். அதேபோது மாணவர்கள் தமக்களிக்கப் பட்டுள்ள வாய்ப்பு எத்தனை அருமை மிக்கது என்பதனை உணர்ந்து அதற்கேற்பத் தமது செயலினை வகுத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தத்தையின் கழுத்திலே பூட்டிடவா, கத்தும் கடல்மூழ்கி முத்தெடுப்பார்? தனக்கென வந்துள்ள தையலன்றோ அதற்கு உரியான்!

அரைத்தெடுத்துப் பூசிமகிழ்தற்கன்றோ சந்தனம்! அடுப்பு எரிப்பதற்கோ? பட்டம் பெறுவதும் பயிற்சி பெறுவதும் நாட்டினருக்கு நல்வாழ்வு தந்திட. எனக்கென்ன தருகின்றனர், ஏன் இந்தத் தாமதம் என்னும் கணை தொடுக்க மட்டுந்தானா? எவரும் அதுபோல் கூறுர்.

உம்மிடம் மிகுதியான நம்பிக்கை கொண்டுள்ளோரில் நானும் ஒருவன். புதியதோர் உலகு செய்வோம் என்று பாடிச் சென்ற பாவலர்*, உம்போன்றோரை மனத்துட்கொண்டே பாடினர். உம்மிடமின்றி வேறு எவரிடம் தூய தொண்டாற்றும் திறனை எதிர்பார்க்க முடியும்?

## 6

குறிக்கோள் தெளிவாக அமைந்திடின் மாணவர்களிடம் மாண்புமிகு செயலினை எதிர்பார்க்க முடியும் என்றுரைத்தேன். இந்தக் குறிக்கோளை மாணவர்கள் பெற்றிடத்தக்க விதத்தில் பாடத்திட்டமும் பயிற்சி முறையும் பழகு முறையும் கல்விக் கூடங்களில் அமைத்திட வேண்டும்.

கல்விக் கூடங்களின் எண்ணிக்கை பெருகி, அரசுகளின் வருவாய்த்துறை அதற்கேற்ப அமையாதிருக்கும் நிலையில், கல்விக்கூடங்கள் எவ்விதமான சூழ்நிலையில் இயங்க வேண்டுமோ அவ்விதம் இருந்திடச் செய்வதும் இயலாததாக

* பாரதிதாசன்

உள்ளது. படிப்படியாக, இந்நிலையினைச் செம்மைப்படுத்த அரசு முனைந்து பணியாற்றி வருகின்றது. ஆண்டு பல ஆகக்கூடும் அடிப்படைத் தேவைகளையேனும் அளித்திடு வதற்கு. அதற்கே பொருள் ஈந்திட வேண்டியுள்ளது. அதுவும் எந்நிலையில், இப்பொருளை பெறுகின்றோம், தருகின்றோம் என்பதனை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

முழு வயிறு காணுதோர், முதுகெலும்பு முறியப் பாடுபடுவோர், வாழ்வின் சுவை காணார், வலியோரின் பகடைக் காய்கள், ஓடப்பர் ஆகிய இவரெல்லாம் தருகின்ற வரிப் பணமே கோட்டையாய், கொடிமரமாய், பாதையாய், மகட்டுகளாய், அமுல் நடத்தும் அதிகாரிகளாய், அறிவுபெற அமையும் கூடங்களாய்த் திகழ்கின்றன. வியர்வை பணமாகிறது; வரியாகப் பெறப்படுகிறது. அதனைக் கொண்டே பல்கலைக்கழகம் முதல் தொடக்கப்பள்ளி வரை கட்டப்பட்டுள்ளன. செயலில் ஈடுபடுவதே இத்துணைத் தந்திடும் ஏழையர்க்கு, நாம் காட்டும் நன்றியறிதல் என்றறிவர். அது மாணவர் உலகில் புதியதோர் திருப்பத்தினைத் தந்திடும்.

கனவு காண்கிறனே? இல்லை. மாணவர் நினைப்பு அறிந்து கூறுகிறேன். எதிர்காலம் அவர்களுடையது.

எத்தகைய தியாகக் கோட்டமாக இந்நாடு இந்நாளிலுள்ளது என்பதனை எத்துணை ஏழ்மைக்கிடையில் இந்நாட்டு மக்கள் தாம் பெற்றிராத பெரிய வாய்ப்பினை நமக்களிக்கின்றார் என்பதனை மாணவர் உணர்ந்திடின் — அவர் உணர்வர் — அவர்களுடைய பொறுப்புணர்ச்சி மிகுந்திடும். ஏற்புடைய செயலினால் அதனை இருளற்றதாக்கி விடுவது அவர்கள் பொறுப்பு அதற்கான ஆற்றல் மிக்கோர் அவர்கள். இஃது என் நம்பிக்கை.

## 7

ஒவ்வொரு நாட்டிலும் சிறப்புமிக்க கட்டங்களில் மாணவர் முன்னணியில் நின்று பணிபுரிந்தனர் என்பதனை வரலாறு காட்டுகின்றது. இன்று மாணவர்களாக நீவிர் இருந்திடும் காலம் நமது நாட்டின் புதிய வரலாறு எழுதப்படும் காலமாகும். கடினமாக உழைத்தால் மட்டுமே

வெற்றிதரக் கூடிய இலட்சியங்கள் நம் முன் நிற்கின்றன. ஆனால், அதே வரிசையில் வசீகரப் பூச்சுக்களுடன் மயக்க மூட்டத்தக்க பேச்சுக்களையும் குறிக்கோள் என்னும் பெயரால் நிற்க விடுகின்றனர்; தெளிந்து அறிதல் வேண்டும்.

நாட்டிலே ஒற்றுமை வேண்டும். இது குறிக்கோள். அனைவரும் ஏற்கத்தக்கது. இதன் வெற்றிக்காக அரும்பணி யாற்றுவது மாணவர் கடன்.

"நாட்டின் ஒற்றுமைக்காக. உன் மொழி உன் மரபு அழிந்திடவும் ஒருப்பட வேண்டும். பிறமொழியின் ஆதிக் கத்தை ஒப்புக் கொள்ளவேண்டும்". இஃது அறிவுள்ள எவரும் ஏற்கமுடியாதது. தன்மானமுள்ள எவரும் எதிர்த் தாகவேண்டியது.

இதனை இலட்சியம் என்றோ திட்டம் என்றோ கூறுவது இலட்சியம் என்பதற்கே களங்கம் தேடுவதாக முடியும்.

நாட்டுப் பொதுச் செல்வம் நாளும் வளர வேண்டும். அதற்கான முறையில் அனைவரும் உழைத்திட வேண்டும். இஃது எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்க இலட்சியம்.

நாட்டுப் செல்வம் பெருகட்டும். அது நாலாறு பேர் களிடம் சென்று சிக்கிக் கிடப்பினும் கவலை வேண்டாம். என்றுரைப்பது இலட்சயமாகாது. அதனைக் கேலிக் கூத்தாக் குவதாகும்.

கூடி வாழ்ந்தால் கோடி இன்பம். இனிய எளிய இலட் சியம்; கூடி வாழ்வோம்; உன்னிடமுள்ளது எனக்கு, என் னிடமுள்ளது எனக்கு என்னும் முறை வகுத்திடல் கூடி வாழ்வதாகாது.

ஆட்டுக்குட்டியைத் தின்று விட்ட ஓநாய், "என்னோடு ஒன்றாக இணைந்துவிட்டது. நாங்கள் இணைபிரியாச் சகோ தரர் ஆகிவிட்டோம்" என்று கூறுவது போன்ற முறையில் ஒற்றுமை வேண்டுவோர் நடந்திடக் கூடாது என்பதனை அறிவுறுத்த வேண்டும்.

## 8

பட்டம் பெற்றோரே! உமது தெளிவுரை கிடைத்து மக்கள் இது போன்ற விளக்கம் பெற்றிடவேண்டும் என விழைகின்றேன்.

அறியாமை, வறுமை ஆகியவற்றினை ஓட்டிடும் ஆற்றல் படை திரட்டிடப் பல்கலைக் கழகம் ஏற்ற இடம் என்பதால் இவற்றினை விரித்துரைத்தேன்.

பயிற்றுமொழி, பாடமொழி, ஆட்சிமொழி, இணைப்பு மொழி என்னுஞ் சொற்றொடர்கள் வேகமாக உலாவிடக் காண்கின்றோம்.

தாய்மொழி என்னுந் தகுதிக்கு ஈடாகவேனும் எந்தத் தகுதியையும் ஒரு மொழி பெற்றிடத்தேவை இல்லை. ஆயினும், நமது தமிழ்மொழி, நமது தாய்மொழி என்பதால் மட்டு மன்று, வளமிக்கது என்பதாலும் எவரும் வியந்து பாராட்டத் தக்கதாகிறது. அந்த வளம் கெடாமலும் மேலும் வளரவுமான செயல்களைச் செம்மையாக்கித் தருவது உமது கடமையாகும்.

தமிழ் ஆட்சிமொழியாக எல்லாத் துறையிலும் திகழ் வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் வெற்றி பெற்றிட உமது நல்லார்வம் நிரம்பத் தேவை.

## 9

உலகுடன் ஒட்டி வாழ்ந்திட, உலகின் அறிவுக் களஞ்சி யத்தின் துணைபெற, ஆங்கில மொழியறிவு இன்றியமையாத தாகிறது. இந்தியாவின் பல பகுதிகளுக்கு இணைப்பு மொழி யாகவும் இந்தியாவுக்கும் வெளிநாடுகளுக்கும் இணைப்புமொழி யாகவும் ஆங்கிலம் இருந்திடட்டும் என்பதனை நாட்டுப் பற்றற்ற தன்மை என்றும் கூறுவாருளர். கூறுவார் என்று மட்டுமே குறிப்பிட்டேன். கருதுவார் என்று கூறவில்லை, காரணத்தோடு.

ஆங்கிலம் முன்பு ஆதிக்கஞ் செலுத்தியவரின் மொழி என்பதாலே, அதனை இணைப்புமொழியாகக் கொள்வது தேசியத் தன்மானமற்றது என்று கூறுபவர், அந்த ஆங்கில

நாட்டுப் பணத்தைக் கடனாகவும் இனாமாகவும் பெற்றுத் தொழில் வளர்த்திட முனைவதைத் தேசியத் தன்மானத்தைக் கெடுப்பது என்று கூறிடக் காணோம். தொழில் நுட்ப அறிவு பெற்றிட ஆங்கிலேயரின் துணை தேடும்போது இந்தப் பேச்சு எழக்காணோம். மொழிபற்றி மட்டும்தான் இப்பேச்சு பேசுகின்றனர். எனவேதான், அவர்கட்கு ஆங்கிலம் கூடாது என்னும் கருத்தில்லை, கூறமட்டுஞ் செய்கிறார்கள் என்றுரைத்தேன்.

ஆங்கிலம் கூடாது என்று கூறுவதுடன், இந்தியே இணைப்புக்கு ஏற்ற மொழி என்று அவர்கள் வலியுறுத்தும்போது, கூறுபவரின் உண்மை நினைப்பும் வடிவமும் நன்றாகத் தெரிகின்றன. இந்தப் போக்கு வெற்றி பெற விடமாட்டோம் என மாணவர்கள் உறுதியுடன் நிற்பதனை அறிந்திருக்கின்றேன். மொழிப் பற்றின் எடுத்துக்காட்டாகத் திகழும் மாணவர்கட்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போது, மொழிப் பிரச்சனையிலே உள்ள சிக்கல்களை — புகுத்தப் பட்டுள்ள சிக்கல்களை - நீக்குவதற்கான முயற்சிகளை, மொழிப் பற்றிலே முழு நம்பிக்கை கொண்டுள்ள தமிழக அரசிடம் ஒப்படைக்க வேண்டும், நம்பிக்கையுடன் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## 10

பல்கலைக் கழகத்தில் பயிலுங்காலை வாழ்க்கையின் நீண்ட நெடும் பயணத்திலே, இது பாசறைப் பருவம் என்னும் உணர்வுடன் இருந்திடுவதே முறையாகும்.

பட்டம் பெற்றிடும் நண்பர்களே ' உம்மிடம் நாடு நிரம்ப எதிர்பார்த்த வண்ணமிருப்பதனை அறிந்து அதற்கேற்ப உமது செயல் முறைகளை வகுத்துக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இம்மாமதுரையினின்றும் புறப்பட்ட படைகள் மாநிலம் மெச்சிடும் வெற்றிகளை முடிமன்னர் நாட்களிலே பெற்றளித்தன என்று வரலாறு கூறுகிறது.

இன்று புறப்படும் படை அறிவுப்படை, இப்பல்கலைக் கழகத்தினின்றும் அமைந்து வெளிக்கிளம்பும் முதற்படை. இதனை வாழ்த்தி வரவேற்றுப் பாராட்டிச் "சென்று வருக! வென்று வருக." எனக் கூறிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததில் நான் உள்ளபடி பெருமிதங் கொள்கிறேன்.

தமிழ் உமது முரசமாகட்டும். பண்பாடு உமது கவசமாகட்டும். அறிவு உமது படைக்கலனாகட்டும், அறநெறி உமது வழித்துணையாகட்டும். உறுதியுடன் செல்வீர். ஊக்கமுடன் பணிபுரிவீர். ஏற்றமிகு வெற்றியினை ஈட்டிடுவீர். பாட்டுமொழியுடைய நமது தாயகம் வாழத் தரணிக்குத்துணை நின்றிடும் தகுதிபெறச் சென்றிடுவீர், வென்றிடுவீர்.

வகைப்பாடு : கல்வி — பல்கலைக் கழகம்
[7—9—67] அன்று மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய முதல் பட்டமளிப்பு விழா உரை.]

# 3. பல்கலைக் கழகத்தின் தலையாய பணி

1

வேந்தர் அவர்களே, இணை வேந்தர் அவர்களே, துணைவேந்தர் அவர்களே, ஆண்டின் பட்டதாரிகளே, நண்பர்களே.

இப்பல்கலைக் கழகம் எனக்களித்த சீர்த்திமிகு சிறப்புக்கு நன்றி கூறிப் பெருந்தயக்கத்துடனும் தடுமாற்றத்துடனும் இந்தப் பேரவையில் பட்டமளிப்பு விழா உரையாற்ற உங்கள் முன் நிற்கிறேன்.

ஆண்டின் பட்டதாரிகளை வாழ்த்துவதற்கும் அவர்களுக்கு ஒளியும் ஒண்மையும் சேர் எதிர்காலம் அமையுமாறு கூறுவதற்குமுரிய மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியில் இங்கிருப்பது இன்பந்தருவதென்றாலும் அவர்களுக்கு ஆன்ற அறிவுரை கூறுவது என்பது அரிய பணியே. ஏனெனில், எனது குறைபாடுகளையும் கடந்த காலத்தில் இம்மேடையில் நின்று பட்டதாரிகளுக்குத் தகுதியும் தரமுமிக்க அறிவுரை நல்கிய ஆன்றோரையும் நான் நன்கறிவேன்.

துறைபோகிய மேதைகள், தேர்ந்து தெளிந்த நல்லறிஞர்கள், அரிய ஆற்றல்மிகு ஆட்சியாளர்கள் ஆகியோரெல்லாம் இங்கு வந்துள்ளனர், தங்கள் தெள்ளியதெளிவுரைகளை வழங்க. எனக்கு முன் இங்கு வந்து உரையாற்றியோர் கூறியவற்றிற்கு மேலாக எவையேனும் ஏற்றமானவற்றைக் கூற எனக்குத் திறமையில்லை என்பதனை ஒரு கணம் கற்பனை செய்து பார்க்கிறேன். ஆகவே, இப்பட்டமளிப்பு விழா உரையாற்ற என்னைப் பணித்திருப்பது பொதுவாகப் பல்கலைக் கழகங்களின் பணி குறித்தும் சிறப்பாக, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பணி பற்றியும் மிக்க ஏற்றமுள்ள கருத்தினை வழங்க என்பதனை உணர்ந்து, நீங்கள் விடுத்த அழைப்பை ஆணையே என எண்ணி அமைதியடைகிறேன்.

என் குறைபாடுகளை நான் அறிந்திருக்கிறேன் என்பது என் பணியின் பளுத்தணிவை எனக்களிக்கிறது. ஏனெனில் தனி முத்திரையோடு கொள்கைகளையே முதன்மையான கருத்துக்களையோ கூற நான் முனையப்போவதில்லை. ஆனால், கடந்த காலத்தில் இங்கு அறிவுரை வழங்கியபோது அடிப்படை நெறிமுறைகளில் சிலவற்றை நீங்கள் நினைவு கூரச்செய்ய மட்டுமே விரும்புகிறேன். அவ்வாறு செய்யுங்

காலை, இங்குமங்கும் அவற்றை விளக்கியும், கல்வியோடு தொடர்புடைய பல துறைகளில் ஆய்ந்த வல்லுநர்களின் முடிவுகளுக்கேற்பப் பாமரனின் கருத்து நோக்கினை உணர்த்தியும் காட்ட விரும்புகிறேன்.

சிலர் என்னதான் வருத்தமுற்ற போதிலும் பாமரனின் காலமிது. கவனத்தில் அதிகங் கொள்ளப்படவேண்டியது அவன் கருத்தே. அப்பட்டமான அவன் நிலையிலேயே அவனைப்பற்றி எடுத்தியம்ப நான் உரிமை கொண்டாடுகிறேன்.

மெய்யறிவியல், அரசியல், பொருளியல், ஒழுக்கவியல் ஆகியவற்றில் கோட்பாடுகளும் கொள்கைகளும் இருந்தாலும், அவை திட்டவட்டமாக அவனுக்காக அமைந்தவையே. திண்ணமாகக் கூறுமிடத்து, இவை தொடர்பான விளக்கங்கள் அறிஞர்களிடமிருந்தும் வல்லுநர்களிடமிருந்தும் வரவேண்டும். அவற்றை அன்றாட அலுவலில் செயல்படுத்தவேண்டிய திறம் ஆட்சியாளரால் மேற்கொள்ளப் படவேண்டிய ஒன்றாகும்.

பல்கலைக் கழகங்கள் அறிவுக் கருவூலங்களாகவும், எண்ணம், அறிவு, கொண்டு ஆகியவற்றைப் பரப்பும் திருத்துாதரகங்களாகவும் இருப்பதால், அவை பீடுடைய பணியை ஆற்றவேண்டியுள்ளன. அப்பீடு ஒவ்வொருநாளும் வளர்ந்த வண்ணமே உள்ளது. ஏனெனில், எல்லாத்துறைகளிலும் அறிவு எல்லைகளிலும் சமூகத்தை மேம்படுத்தும் பணியில் தனியார்கள் மேன்மேலும் தங்களைத் தகுதியாக்கிக் கொண்டுள்ளனர். மக்களாட்சிக்குக் கால்கோள் செய்து, முடியாட்சியையும் முனைப்பாட்சியையும் தவிர்த்துள்ள காலத்தின் நிலையாகும் இது.

முடியாட்சிக் காலத்திலும் கோமானாட்சிக் காலத்திலும் அரச அவையினையோ; கோமான்கள், உயர்குடிமக்கள் ஆகியோரின் பொன்மினுக்கு மாளிகைகளையோ அணி செய்யவே அறிஞர்களையும் கவிஞர்களையும் பல்கலைக்

கழகங்கள் பயிற்றுவிக்க வேண்டியிருந்தன. அவர் தம் அறிவு மாடமாளிகைக்காகவே இருந்தது, மக்கள் மன்றத்திற்காக அல்ல.

அந்த நாட்கள் எண்ணிக்கை ஏற்றம் பெற்ற காலம். நல்லறிஞர்களோ மக்களை நோக்கியுள்ள சிக்கல்களை ஏறெடுத்தும் பார்க்காத காலம். பாமரனின் சத்தத்திலிருந்தும் சந்தடியிலிருந்தும் அப்பால் ஒடுங்கிய இடங்களில் அமர்ந்து பணியாற்ற அவர்கள் மனநிறைவு கொண்டிருந்தனர். மெய் யறிவு அல்லது கவிதை எனும் விலையுயர்ந்த இழையை அவர்கள் நெய்தனர். இவ்விழை மீண்டும் பளபளக்கும் பட்டாடைகளாக அவற்றைத் தேர்ந்தெடுத்தோருக்கும் பேற் றுரிமை பெற்றோருக்கும் பயன்பட்டது.

**2**

கடந்த காலத்தில் உள்ளது போன்று, இன்று பல்கலைக் கழகத்தின் பணி வரையறுக்கப்பட்டதோ விலக்கிற்கானதோ அன்று. அதன் செயலாண்மை விரிந்துள்ளது. அதன் அடிப் படைகளின் அல்ல, எல்லையில். அது பாமரனைக் கணக்கில் கொள்ளவேண்டியுள்ளது. அவனுடைய பாமரத்தன்மையை நீடித்திருக்கச் செய்ய அல்ல. மாறாக, அவனைச் சீராக்கவும் செம்மைப்படுத்தவும் அறிவுறுத்தவும் வழிநடத்தவும் செய்திட. ஏனெனில் இன்று அவன் வழக்கத்திற்கு மாறான பணிகளை ஆற்றவேண்டியுள்ளது.

மக்களாட்சியில் குடிமகன் என்னும் கடமையை அவன் செய்யவேண்டியுள்ளது. இப்பணி இனிய எண்ணங்களைத் தூண்டவல்லது. ஆனால், அது வேண்டுவது பொறுமையும் விடாமுயற்சியும், நம்பிக்கையும் நல்லெண்ணமும், தனக்குத் தானே நம்பிக்கையும் மற்றவர்கள் மீது நம்பிக்கையும், பொறுப்புக்களைத் தாங்கும் அவனுடைய இயற்கைத்திறத்தில் நம்பிக்கையும் ஆகும்.

நாட்டை ஆள்பவனாகவும் பாமரன் ஆகியுள்ளான். தன்னுடைய தலைவிதியைத் தன் கையிலேயே அவன் ஏந்தியுள்ளான்.

அரண்மனைகளிலும் மாடமாளிகைகளிலும் ஆளுவோர் பிறந்த அக்காலத்தைப் போலல்லாது, இன்று ஒவ்வொரு சிற்றூரும் சிறு குடிசையும் ஓர் உள்ளார்ந்த ஆற்றல் பெற்ற ஆட்சிப் பிறப்பிடமாகியுள்ளது. இந்நிலையில் பல்கலைக் கழகங்களின் இன்றைய கடமை, இன்றைய பொறுப்பு, மக்களாட்சியைக் கனிவுள்ளதாகவும் கருத்தக்கதாகவும் ஆக்கக்கூடிய ஒரு தனியாளாகப் பாமரனை உருவாக்குவதே ஆகும்.

நோக்கிலும் அளவிலும் பல்கலைக் கழகங்களின் பொறுப்புக்களும் கடமைகளும் வளர்ந்துள்ளன என்று கூறினேன். ஆனால், அடிப்படைகள் மாறவில்லை என்றும், இந்த அடிப்படைகள் நிலைத்தபேறும் நீடிய பயனும் உடையன என்றும் சுட்டிக் காட்டினேன்.

பல்கலைக் கழகத்தின் தலையாய பணி, அறிவாற்றலைப் பெற விரும்புவோர்க்கு அதனை அதன் உண்மையான அளவிலும் நோக்கிலும் அளிப்பதும், உலகின் கருத்துக்கள் குறிக்கோள்கள் ஆகியவற்றின் தனியாண்மையினைக் காப்பதுமாகும்.

நடுநிலையுள்ளம், சிறப்புள்ளவற்றையும் சிறப்பில்லாதவற்றையும் வேறுபடுத்தி அறியும் திறம், அச்சமோ அயர்வோ இன்றி, ஒரு சிக்கலை அதன் எல்லாக் கோணங்களிலும் பார்க்குந்திறன், மற்றவர் கருத்தை மருட்சியில்லாமல் ஏற்றல் ஆகியவை மாற்றஇயலா அடிப்படைகளாகும். இவ்வியல்புகள் பெற்றுள்ள ஆடவரையும் பெண்டிரையும் நீரோட்டம் போல் தொடர்ந்து சமூகத்திற்களிப்பது பல்கலைக் கழகங்களால் மட்டுமே இயலும்.

பிரசேல்ஸ் பல்கலைக் கழகத்தில் உரையாற்றியபொழுது, நம் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதா கிருட்டிணன் கூறியது பின்வருமாறு :

" மற்ற அரசு வகைகளைக் காட்டிலும் மக்களாட்சி மறுவற இயங்க, வேண்டுவன அதிக இயக்புகளே. பல்கலைக் கழகங்களிலேயே மக்களாட்சி உண்மையுணர்வினையும் மற்றவர்களின் கருத்துகளைப் பாராட்டுதலையும் வேறுபாடுகளைச் சரிகட்டுவதையும் நாம் கலந்துரையாடல்கள் வாயிலாகவே வளர்க்க இயலும். தனியாள் தன் பொறுப்பினையும் தீர்ப்பினையும் செயல்படுத்துவதனால், மக்களாட்சியினை நலமுள்ளதாகவும் வலுவுள்ளதாகவும் வைக்க இயலும். பல்கலைக் கழகங்களின் கடந்த காலத்தின் போராட்டங்களை நாம் நினைவுகூர வேண்டியவர்களாகவும், தற்காலத்தின் வாய்ப்புக்கள் வல்லடிகள், இடர்கள், பொறுப்புக்கள் ஆகியவற்றை உணரவேண்டியவர்களாகவும் உள்ளோம்."

மக்களாட்சி என்பது ஓர் அரசு வகை மட்டுமன்று ; அது புதிய வாழ்க்கைக்கு ஓர் அழைப்பு ; நலன்களையும் நாட்டங்களையும் பொறுப்புக்களையும் பகிர்ந்துகொள்ளுங் கலையில் ஓர் ஆய்வு ; பொதுத் தொண்டிற்காக ஒவ்வொரு தனியாளிடமும் உள்ள இயல்பான ஆற்றலை இயக்குவதற்கும் ஒருமுகப்படுத்துவதற்குமான ஒரு முயற்சி.

ஆகவே, நாம் தனியாள் திறனை வீணாக்குவதோ ஒரு தனி ஆடவர் அல்லது பெண்டிரை வலுக்குறையச் செய்வதோ ஒரு தனியாள் வளர்ச்சியைக் குன்றச் செய்வதோ அவனைக் கொடுங்கோன்மையில் சிக்க வைப்பதோ கூடாது.

ஆண்டுக்காண்டு, பல்கலைக் கழகங்கள் பயிற்றுவித்து அனுப்பும் பட்டதாரிகள் வாயிலாகத் தன்னல வளர்ச்சியினையும் கொடுங்கோன்மையையும் உருவாக்க முயலும் ஆற்றல்களையும் அழித்தொழிக்கவேண்டும். பாசாங்கினையும் பகல்வேடத்தினையும் எதிர்த்துப் போராடவேண்டும். மனித மாண்பினை அரியணை ஏறச் செய்திடவேண்டும்.

## 3

ஆண்டின் பட்டதாரிகளே! நீங்கள் எல்லாம் ஏக்கமற்ற எதிர்காலத்தைப் பெற விழைகின்றேன். ஏனெனில், ஒரு தனியாளின்-பட்டதாரியோ பட்டதாரி இல்லையோ-உடனடி நாட்டமெல்லாம் மதிப்பு மிக்க வாழ்க்கைக்குரிய வழி வகையினைப் பெறுவதே. எல்லா மனிதச் செயலின் மூனைப் பார்வமும், முதலார்வமும் அதுவே. ஒருவரும் அதைப் புறக்கணிக்க இயலாது. ஆனல், அது மட்டுமே தனிக் குறிக்கோளாக இருக்க இயலாது.

வெறுந் தனிப் பருவுலக முன்னேற்றத்தைக் காட்டிலும், உயர்ந்த செம்மார்ந்த ஒரு நிலையினை நாடு உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறது. ஏனெனில் இப்பல்கலைக்கழகக் கல்வி என்பது நீங்கள் துய்த்து மகிழும் ஒருபேறு. அதற்காக நீங்கள் சார்ந்துள்ள சமுதாயத்திற்கு ஆழ்ந்த கடப்பாடுடையீர்!

உயர்கல்வி நிலையங்களைக் கட்டிக் காக்கத் தேவைப்படும் பணத்தின் பெரும்பகுதி நாட்டின் வாயிலாகச் சமுதாயத்திலிருந்து திரட்டப்படும் வருவாய்களிலிருந்து வருகிறது. அவ்வருவாயின் பெரும்பகுதி உழைப்போர் உழுவோரிடமிருந்தே வருகிறது. இவர்கள் நீங்கள் துய்க்கும் பேற்றினைப் பெறாதவர்கள்; விருப்பப்பட்டே துன்பத்தினை ஏற்றவர்கள். ஆகவே, அடுத்த தலைமுறையினரை அவர்கள் நல்வாழ்வு வாழச் செய்பவர்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டதாரிகளே! "நீங்கள் எவ்வாறு அதனைத் திருப்பித்தரப் போகிறீர்கள்? சமூகப் பேழையிலிருந்து நீங்கள் பெருமளவுக்கு எடுத்ததை ஈடுகட்டுவதற்குரிய உங்கள் பங்கென்ன?" என்று நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன். மீண்டும் நீங்கள் அதனைச் செழிப்பு தரத்தக்க வகையில் நிரப்பாத வரையில், வரும் தலைமுறையினர் வெற்றுக் கருவூலத்தையே காண வேண்டி வரும்!

நீங்கள் பெறும் உயரிய கல்வி, சமூகத்தினிடம் உங்களுக்குள்ள பொறுப்பை அதிகரிக்கச் செய்கிறது. ஆகவே, உங்கள் தனி முன்னேற்றத்துடன் கூடவே, உங்களிடமிருந்து போதிய வரவினை மீண்டும் எதிர்பார்க்கச் சமூகத்திற்கு உரிமையுண்டு. அதிகப் பணம் என்னும் அளவில் அல்ல பணி என்னும் அளவில் சமூகத்தை சீராக்கவும் இருண்ட சந்து பொந்துகளில் ஒளியேற்றவும் அழுக்கடைந்த இடங்களில் ஒளிபாய்ச்சவும் துயருற்றோருக்கு ஆறுதல் அளிக்கவும், நம்பிக்கையிழந்தோருக்கு நம்பிக்கையூட்டவும் ஒவ்வொருவருக்கும் புதிய வாழ்வளிக்கவும் இப்பணி பாங்குடன் அமைய வேண்டும்.

இது வரவேற்கதக்க, சீரிய குறிக்கோள் என்பதனை ஒருவரும் மறுக்கமாட்டார். ஆனால், எவரும் இக்குறிக்கோளைச் செயற்படுத்திட முன்வர மாட்டார். இருப்பினும், நம் பண்டைய சிந்தனையாளர்களும் இக்காலச் சிந்தனையாளர்களும் "அறிவு செயலில் வெளிப்படுகிறது," என்பதனை அழுத்தந் திருத்தமாகக் கூறியுள்ளனர்.

பணி பயனாக அமையாவிடில், அறிவுரை இனிய வெற்றுரையே. ஜெபர்சன் கூறியுள்ளது இதுவே: "வாய்ப்பு என்னும் மக்களாட்சியிலிருந்து எழும் அருஞ்செயல் என்னும் முடியாட்சியினை நாம் கனவு காணவேண்டும்."

சமூகத் தொண்டாற்றும் தலையாய பணிக்கு உங்கள் உதவியினையும் ஒத்துழைப்பினையும் நான் நாடும்பொழுது, அருள் கூர்ந்து கண் சிமிட்டாதீர், புன்னகை பூக்காதீர், அதெல்லாம் சொல்வதற்கு மிக எளிது என்று சொல்லாதீர் வழியில் தட்டுப்படும் இடர்களைப்பற்றி அறியாதவன் அல்லன் நான். உங்கள் மீதுள்ள சூழ்நிலையின் செல்வாக்கினையும் நான் ஒதுக்கித் தள்ளுபவனுமல்லன்.

நீங்கள் பயணத்தைத் தொடரவுள்ள உலகம், உங்கள் எண்ணத்தை மங்கச் செய்யலாம். உங்கள் உறுதிப்பாட்டினை உருக்குலைக்கலாம். உங்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ள நெறி முறைகளிலிருந்து பெருமளவுக்கு வேறுபடும் கசப்பான நடைமுறைகளை நேருக்கு நேர் நீங்கள் காண்கிறீர்கள். தன்னலந் தேடுவோர் அரியணை ஏறுவதையும், பொறுமை மிக்க தொண்டர் பொல்லாங்கு பேசப்படுவதையும் நீங்கள் காணலாம். எல்லா வகைக் கொடுங்கோன்மையும் உங்களை உறுத்துப் பார்க்கலாம். நீங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் ஒரு போராட்டமாக இருக்கலாம் சூழ்நிலை இப்படி இருப்பதனால், உரமூட்டக்கூடிய நன்னோக்குள்ளவர்களும் நெஞ்சுரமிழந்து சொகுசான வாழ்க்கையினை வலிந்து மேற்கொள்வர் என்பதனை நான் ஒப்புக்கொள்கிறேன்.

ஆனால், பணியார்வமுள்ள ஆடவரும் பெண்டிரும் நீரோட்டம்போல் தொடர்ந்து வெற்றிவாகையுடன் புனிதப் போரினை மேற்கொண்டு, மனித சமுதாயத்திற்கு அளவிடற்கரிய நன்மைகளைச் செய்துள்ளார்கள் என்பதையும் நாம் உணரத்தான் வேண்டும்.

தமிழர்களாகிய நாம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இக்குறிக்கோளினை உயர ஏந்திப் பிடித்தவாறு உள்ளோம். எனவே, புறநானூற்றில் இப்பாடல் பகுதியைக் காணுகின்றோம்.

“ உண்டால் அம்ம இவ்வுலகம் ...

... ...     ... ...     ... ...

தமக்கென முயலா நோன்றாள்

பிறர்க்கென முயலுநர் உண்மை யானே. ”

— புறம் (182)

அந்த உயரிய பரம்பரையில் வந்தவர்கள் என்னும் முறையில் உங்களைச் சார்ந்துள்ள சூழ்நிலையினை வெல்லவும் உங்களால் இயன்ற அளவுக்குச் சமூகத் தொண்டாற்றவும் சிறந்த தகுதி உங்கட்குண்டு.

4

நன்மை செய்திட விரும்பும் எவரும் அவர்தம் வழியில் குறுக்கிடும் இடர்களை மக்கள் அகற்றுவார்கள் என எதிர் பார்க்க இயலாது. அவர்கள் அவ்வாறு விளைவித்தாலும், அவற்றினை அமைதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். "இத் தகைய தடைகளைத் தன் பட்டறிவினால் தெளிந்தறிந்து தேடும் வலிமையினாலேயே, அவற்றை வெல்ல இயலும்." என ஆல்பர்ட் சுவைசர் கூறுகிறார்.

பன்னாடுகளிலுள்ள சிக்கல்கள் ஒரே தன்மையினவாயினும் நமது நாட்டுச் சிக்கல்களுக்குரிய சிறப்புத்தன்மை முனைப்பான இயல்புடையதாகும்.

நம்முடைய சிக்கல் கீறலிலிருந்து தொடங்கும் நிலைமை யன்று. அது அவ்வாறு இருக்குமாயின், அதற்குத் தேவைப் படுவது சீரிய முயற்சியே. நம்முடைய சிக்கல் உள்ளம் அரிக்கப்பட்ட ஒரு நிலைமையாகும். நாம் புதிய துறைகளைத் தேடும் பணியில் இல்லை. ஆனால் அவற்றிற்கு உரமிடும் பணி யிலும் நீர்ப்பாய்ச்சும் பணியிலும் நாம் ஈடுபட வேண்டியவர் களாக உள்ளோம். நாம் நமது குறிக்கோள்களைத் தேட வில்லை. ஆனால் குறிக்கோள் பாளங்களை வகைப்படுத்து வதிலும் தொகைப்படுத்துவதிலும் சரிபார்ப்பதிலும் நாம் ஈடு பட்டுள்ளோம். இது சிக்கலான பணியேயாகும்.

பண்பாட்டில் குறைந்தவர்கள் அல்லர் நாம். ஆனால், காலம் என்னுஞ் சிலந்திக் கூட்டிலிருந்து நாம் அதனைத் துலக்க வேண்டியுள்ளது. கலப்படத்தை நீக்க வேண்டியுள்ளது. சுருங்கக் கூறுமிடத்து, நம்முடைய முழு எண்ணத்தினையும் நாம் சீர்படுத்த வேண்டும்; நம்மை நாமே மீண்டும் நாம் கண்டறிந்து கொள்ளவேண்டும்.

ஒரு காலத்தில் உயர்ந்த ஒவ்வொன்றின் காவலராக நாமிருந்தோம், ஆனால், இன்று சிதைக்கும் நோய் நுண்ணங்களைப் பெருகவும் வளரவும் விட்டு விட்டோம். இன்றைய நமது பணி, புதிய காற்றையும் ஒளியையும் விட்டு, மூல வடிவத்தையும் உருவத்தையும் மீண்டும் சமைக்கவேண்டும். அதுவே தொலைநாடுகளில் நம்மை நன்கறியச் செய்வது.

நம் இலக்கியம், கலை, சிற்பம் ஆகியவை மனித நுண்ணறிவின் நேர்த்தியான மாதிரிகள். ஆனால், அவை காலத்தின் குலைவுகளையும், ஓட்டங்கள் எதிரோட்டங்கள் ஆகியவற்றின் விளைவுகளையுங்கூடத் தாங்கியுள்ளன. அதனால் நாட்டின் புகழினையும் மேம்பாட்டினையும் அறிய, அயல்நாட்டு வரலாற்றாசிரியரையோ அறிஞரையோ நாம் நாட வேண்டிய நிலையில் உள்ளோம்.

அகவைக்கு மதிப்பளிக்க வேண்டும். ஆனால், மீண்டும் அது வலுவடையாதவரை சீரழிவுதான் விளையும். நம்முடைய பண்பாடும் நாகரிகமும் மிகப்பழமையானவை. ஆனால், அவற்றை உருக்குலையச் செய்யுமாறு வடுக்களையும் சுருக்கங்களையும் அனுமதித்து விட்டோம். ஆகவே இன்றைய கடமை நம்முடையதை மீண்டுங் கண்டறிந்து, அதனைச் செப்பஞ் செய்வதாகும். ஏனைய நாடுகளின் ஏற்றங்களிலிருந்து வேண்டிய அளவுக்கு எடுத்து, அதனை வளப்படுத்த வேண்டும்.

நம்முடைய சிக்கல் எவ்வறிவுத் துறையிலும் புதிய ஏற்பாடு வேண்டுமென்பதன்று; எல்லாத் துறைகளிலும் நேர்த்தியான மாதிரிகளை நாம் கண்டுள்ளோம். நம்முடைய ஏற்பாடுகளுக்குச் சாகாத் தன்மையுண்டென்பதற்கு உள்ளபடியே நாம் உரிமை கொண்டாட இயலும். ஆனால், அவற்றை இனிமையும் புதுமையும் ஆற்றலும் பயனுமுள்ளதாய் வைத்துக் கொள்வதில் நாம் வெற்றி பெற்றோம் இல்லை. ஏனெனில் அவற்றை நாம் சிக்கிச் சீரழிய விட்டுவிட்டோம். "ஓர் ஏற்பாடு நீடித்து நிலைபெற, மாறா இளமையினையும்

மாறுந் தன்மையினையும் கொண்டிருக்க வேண்டும்'' என்று டாக்டர். இராதாகிருட்டிணன் கூறுகின்றார். இதனையே வேறு வகையில் கூறவேண்டுமானால், புதுக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அஃது இருக்க வேண்டும். இளைஞர்களுக்கு உள்ள எதிர்த்தாக்கு உள்ளத்தையும் ஒளிமறைவின்மையையும் நெகிழ்ச்சியினையும் வீரச்செயல் உணர்வினையும் அது கொண்டிருக்க வேண்டும். இதனால் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதை அறிகின்ற காரணத்தால் ஏற்று, அவர்கள் அதனை மாற்றியமைப்பார்கள்.

ஈயாஸ் என்னுந் தெய்வம் ஒரு மனிதனைக் காதலித்துத் தன் காதலனுக்கு இறவாமை வேண்டுமென இறைவனை வேண்டிற்று. ''அவ்வாறே ஆகக்கடவது'', என்றார் இறைவனும். காதலனும் இறவாமை பெற்றான். ஆனால் முதுமையும் மூப்பும் சீரழிவும் உறுதியின்மையும் பெற்றான். ஈயாசின் கண்களுக்கு முன்பு விருந்தாக இருந்தது, இபொழுது வருத்தப்படுவதற்கும் வெறுத்தொதுக்குவதற்குமுரிய காட்சியாயிற்று. இறவாமை பெற்ற காதலனும் இறக்க நாட்டங் கொண்டான். ஏனெனில் சீரழிவின் சிக்கும்பொழுது, வாழ்வு என்பது ஏதுமற்ற ஒன்றே. பின், ஈயாஸ் வருந்திக் கூறியதாவது: ''மாறா இளமை வேண்டுவதை மறந்து, என்னுடைய காதலனுக்கு இறவாமையே வேண்டினேன்''.

இந்நாட்டிலுள்ள நாம் இத்தகைய நிலைமையினை நோக்கியவாறு உள்ளோம். நம் எண்ணத்தினையும் பண்பாட்டினையும் நாகரிகத்தையும் இளமையாக்கும் பொறுப்பை நாம் ஏற்றுள்ளோம். அம்முயற்சியினைச் செய்வதற்கு மாறாக நீண்ட காலமாகச் சிதைந்த வடிவங்களைத் திறனாய்வாளர்களிடமிருந்தும் புதிய கருத்தோட்டங்களிலிருந்தும் பாதுகாக்கவே நாம் பெருவிருப்பங் கொண்டுள்ளோம். உலகின் மற்றப் பகுதிகளோ, சலிப்பில்லாமலும் பொறுமையுடனும் உண்மையினை ஊடுருவிப் புதிய முடிவுகளைக் காணும்

பொழுதும், புதிய அறிவு எல்லைகளை அடைய முயலும் பொழுதும், சின்னஞ்சின்னமான அரணுக்கருகே அமர்வதில் நிறைவு கொண்டு, பழம்பல்லவி பாடியவாறு நாம் உள்ளோம்.

நம் சமயம் சிதைந்து சடங்குகளாகியுள்ளது. முன்பு சாதியும் வகுப்புமற்ற நம் சமூகம் சிதைந்து, சாதியும் சமயப் பிணக்கும் நிறைந்த இறுக்கமுள்ள அறைகளாகியுள்ளது. அதே காலை, பழைமைக்கும் மூட நம்பிக்கைக்கும் அறிவார்ந்த விளக்கங்களை அள்ளி வீசி, அவற்றைப் பேணிப் பாதுகாப்பவர்களாகவே நாம் உள்ளோம். அல்லது வாயடங்கியுள்ளோம். இடித்துரை, எதிர்ப்பு ஆகியவற்றிற்கிடையேயும் அறியாமலேயே நாம் இந்நிலையினை நீடிக்க விட்டுள்ளோம். அதற்கு மேலும், நெஞ்சுரமிக்க வீரன் ஒருவன் நிலவும் சீர்கேடுகளை எதிர்த்துப் போரிட முன் வரும்பொழுது, பழங்கால ஏற்பாடுகளையும் உயரிய மரபுகளையும் அழிக்க வல்லவன் அவனென்று அவனை இழித்தும் பழித்தும் கூறுகின்றோம். இந்நிலையில், சமூகத்தின் பெரும் பகுதியினரின் சீற்றத்தினையும் ஏமாற்றத்தினையும் எதிரொளிப்பவர் பெரியார் இராமசாமி ஆவார். ஏற்பாடுகளைச் சிதைய விடுவதும், அதேகாலை பகுத்தறிவு பரவப் பாடுபடுவோரை பழித்துக் கூறுவதும், மூட நம்பிக்கையும், பழைமையும் நிலைத்திருக்க வழிசெய்வதும் நம் சமூகத்தை நாம் சிதைய விடுவதைத் தவிர வேறில்லை என்பதனையே காட்டுகிறது.

இவ்வரிய சிக்கல்களுக்குத் தங்குதடையில்லாத முழுமையான கலந்துரையாடலை அளிப்பதற்குரிய மன்றங்கள் பல்கலைக்கழகங்களேயாகும். இங்குப் பயிற்சி பெறும் பட்டதாரிகள் சமூகத்தைச் சீரமைக்கும் திருத்தூதுவர்களாக வெளியேற வேண்டும். இச்சீரமைப்புப்பணி நீண்ட நெடுங்காலமாகச் செய்யப்படவேண்டிய ஒன்றாகும்.

5

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளே! சாதிக்கு எதிரான புனிதப் போரினைத் தொடர்ந்து நடத்துமாறு, நான் உங்களை அழைக்கின்றேன். ஏனெனில், மக்களாட்சியுடனே

மூட நம்பிக்கைக்கு எதிராகவோ, அறிவியலுடனே பல்வகைப் பட்ட கொடுங்கோன்மைக்கு எதிராகவோ சாதி இணைந்தும் பிணைந்தும் இருக்க இயலாது. விடுதலை, சரிநிகர்நிலை, உடன் பிறப்புத்தன்மை ஆகியவற்றுடன் கொடுங்கோன்மையின் பல வகைகள் இணைந்திருக்க இயலா.

உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் வாழ வகை களைக்காண முயலும் போது, சமூகத்திற்குரிய உங்கள் கடமை யினையும் நீங்கள் ஆற்றவேண்டியுள்ளீர்கள். பகுத்தறிவுப் பலவன்களாக ஆகவேண்டும் நீங்கள் !

பகுத்தறிவு என்பது அடிப்படை உண்மைகளையும் வெளிப்படை உண்மைகளையும் மறுதலிப்பதன்று. ஆனால், எண்ணம், செயல், ஆகியவற்றின் உள்ள ஐயுறவுநிலைகளை அழிப்பதாகும் அஃது. நூற்றாண்டுக் காலமாகப் படிந்துள்ள சிலந்திக் கூடுகளை நீக்க வேண்டி யுள்ளதால், துணிச்சலுடன் சலிப்பில்லாமல் உழைத்துப் பகுத்தறிவினைத் தலையாய நிலையில் நீங்கள் அரசோச்சச் செய்யவேண்டும்.

நம் காலத்தின் மற்றொரு விந்தையான இயல்பு, நாடு என்னும் வடிவம் பெறும் நிலையில் நாம் உள்ளோம் என்ப தாகும். தங்களுடைய அளவுக்குமீறிய ஆவலினால், ஒருமைப் பாட்டை உருவாக்கச் சிலர் ஒற்றுமையாய ஒரு சீர்த்தன்மை யோடு குழப்புகின்றனர். இங்குப் பயிற்சி பெற்றவர்களின் கடமை, தெளிவாக நெறிமுறையினை விளக்கி, ஒற்றுமை என்னும் பெயரால் நாட்டின் எப்பகுதியும் அறிந்தோ அறியா மலோ மற்றொரு பகுதிக்குக்கீழ்ப்படியும் நிலையில் இல்லாதவாறு பார்த்துக் கொள்வதாகும். இலக்கு எவ்வளவுதான் உயர்ந்த தாக இருந்தாலும், நேர்மை தவறிய நடப்புக்கு நாம் உடந் தையாக இருக்க இயலாது.

விடுதலை அடையுமுன் தனக்கே உரிய அறிவுக்கூர்மை யுடன் ராஜாஜி கூறியதாவது: "உண்மையில் நம் அரசியல் ஆய்வு, உருகும் இரும்பினையும் உலோகங்களையும் புடக்- குகையில் ஊற்றி உலோகக் கலவை செய்வது போன்றதாகும். உலோகக்கலவை அழிவுதேய்வினைத் தாங்க வல்லது. மற்ற

மக்கள் தங்கள் நாடுகளில் செய்துள்ள சீனகலத்தைப் போன்றதன்று அது. பிளாஸ்டிக் போன்று, அவர்களது மக்களாட்சி ஆக்குவதற்கு எளிது. ஆனால் நாம் உலகங்-களோடு ஊடாடிக் கொண்டிருக்கிறோம்''.

நாட்டு ஒருமைப்பாடு என்பது உயர்ந்ததும் அதிகம் நாடப்படுவதுமான ஓர் இலக்கு. ஆனால், மொழித்துறையிலோ பொருளாதாரத் துறையிலோ அநீதியினையும் ஆதிக்கத்தினையும் பொறுக்க இயலாது. அக்காரணத்திற்காகவே இவ்வரசு * அமைந்துள்ளது. இந்தியினை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளுமாறு வலுவந்தப்படுத்த முடியாது என்னும் மக்கள் உறுதிப்பாட்டினைப் பிரதிபலிப்பதாகவே அமைந்து உள்ளது.

இணைப்பு மொழியாக ஆங்கிலமே தொடரவேண்டும் என்று நாம் விரும்பும்பொழுது, சிலர் நமது நோக்கத்தினைத் தவறுகப் புரிந்து கொள்கின்றனர். பொருந்தா வாதங்களையும் மறுக்கக்கூடிய புள்ளி விவரங்களையும் அவர்கள் அள்ளி வீசுகின்றனர். சீரழிவு என்னும் பூச்சாண்டி காட்டுகின்றனர்; படைகளைக் காட்டி அச்சுறுத்தி மக்களை வாயடைக்க விரும்புகின்றனர். வல்லடி முறைகளினால் சிக்கல்கள் ஒரு பொழுதும் தீர்க்கப்பட்டதில்லை. இப்பொழுது மட்டுமன்று எதிர்காலத்திலுங்கூட. இந்த மொழிச் சிக்கல் நம் வாழ்க்கை முறையோடு இரண்டறக் கலந்தது.

தமிழும் ஆங்கிலமும் நம் எல்லாத் தேவைகளையும் நிறைவுசெய்ய வல்லவை என்றும், முன்னது இம்மாநிலத்தின் ஆட்சி மொழியாகவும்; பின்னது இணைப்பு மொழியாகவும் இருக்க வல்லவை என்றும் தமிழ்நாடு அரசு ஐயந்திரிபறக் கூறியுள்ளது. அது ஏற்றுக் கொள்ளப்பட்டால் — இந்தி ஆதரவாளர்களில் மிக முனைப்பாக உள்ளவர்களும் அதனை ஏற்றுக் கொள்கின்றனர் — வெளியுலகிற்கும் நம் மாநிலத்திற்குமிடையே இணைப்பு மொழியாக ஆங்கிலம் போற்றத்

* தி. மு. க. அரசு

றக்க அளவுக்கு அமையும். இருந்தும், இப்ரு இந்திரான் இணைப்பு மொழியாக இருக்க வேண்டுமென்று பரிந்து பேசுவறு ஏன்?

வெளியுலகத்தோடு நம்மை இணைக்கும் மொழியே, திண்ணமாக அதே பணியினை இந்தியாவினுள்ளும் ஆற்ற இயலும். இரு இணைப்பு மொழிகளுக்குப் பரிந்து பேசுவது என்பது சுவரில் பூனை செல்லப் பெரிய துளை இருக்கும் பொழுது, அதன் குட்டி செல்லச் சிறிய துளையிடுவது போன்றுள்ளது. பூனைக்குப் பொருந்துவது குட்டிக்கும் பொருந்துவதே.

எந்த ஓர் அயல் நாட்டுப் பொருளையும் நாம் அழிப்பது போன்று அல்லது விட்டுவிடுவது போன்று, ஆங்கிலம் அயல் மொழி என்று சிலர் வாதிடுகின்றனர். அயல்நாட்டுக் கப்பல்களில் நாம் கோதுமையினைக் கொண்டு வருகிறோம். பணத்தில் மட்டுமல்லாமல் தொழில் நுட்ப அறிவிலும் நாம் அயல்நாட்டு உதவியினைப் பெறுகிறோம். யாராவது ஒரு தலைவர் கிழக்கிற்கும் மேற்கிற்கும் முடிந்த உதவியினைப் பெறச் செல்லாத வாரமே இல்லை எனலாம். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, நமக்கே உரிய பல ஏற்பாடுகளை நாம் கைவிட்டுவிட்டோம்.

கிராமியப் பொருளாதாரத்தோடு நாம் அமைதியடையவில்லை; டிராம்பேக்களையும் எண்ணூர்களையும் விரும்புகின்றோம். அவை அயல்நாட்டவை என்பதை நாம் அறிந்தோம் இல்லை. மொழி பற்றிய விவகாரத்தில் மட்டும் அளவுக்கு மீறிய தேசியவாதிகளாக நாம் நம்மைக் காட்டிக் கொள்கிறோம்; ஆங்கிலத்தினை அயல்மொழி என்கிறோம்.

ஷெல்லியும் பைரனும், கீட்சும் கோல்ரிட்ஜும், எமர்சனும் பேக்கனும் கூர்ந்து நோக்குமிடத்து, நமக்கு அயலார் அல்லர். திருவள்ளுவர் வெறுந் தமிழர் மட்டுந்தானா? அவர்கள் எல்லாம் உலகின் நற்குடி மக்கள், உலக நல்லாசான்கள். அவர்களது கருத்துக்களை அடக்கிடும் மொழி அயல்நாட்டில் இருந்து வருகிறது என்பதற்காகப் புறக்கணிக்

கப்பட வேண்டுவதில்லை. கல்லூரிகளில் முன்னேற்றந்தரும் வகையில் தமிழினைப் பயிற்று மொழியாக்க வேண்டும் என்னும் நெறிமுறையினை ஒப்புக்கொண்டு, உரிய எச்சரிக்கையோடு அதனைச் செயற்படுத்தி வரும் நடைமுறையிலிருந்து ஆங்கிலத்திற்கு உயரிய இடத்தை நாம் அளிக்கவில்லை என்பது நன்கு தெரிகிறது.

6

பல்கலைக்கழகக் கல்வி என்பது பல்வேறு நாடுகளிலும் பேணிப் போற்றப்படும் சிறந்த எண்ணங்களின் பொழிவேயாகும். உங்களிடமிருந்தே உலகளாவிய எண்ணமும் கருத்தும் பரவ வேண்டும்.

இவற்றை எல்லாம் நாம் பெறவேண்டுமென்றால் — பல்கலைக்கழகப் பட்டதாரிகளிடமிருந்து அதிகம் பெற வேண்டுமென்றால் — பல்கலைக்கழகங்களில் நடப்பிலுள்ள முறைகளையும் பயிற்றுமுறைகளையும் ஆட்சிமுறைகளையும் நாம் மறு ஆய்வு செய்து செம்மைப்படுத்த வேண்டும். இதனால், ஒவ்வொரு மாணவரும் தம்முடைய பேராசிரியர்களோடு அறிவைப் பெறுவதில் உவகையிலும் உரிமையிலும் உடன்பங்காளர் என்பதனை உணர இயலும். பயிற்று முறைகள், ஆட்சி முறைகள் ஆகியவை பற்றி ஆழமாக நான் கூற விரும்பவில்லை. அவ்வத்துறை வல்லுநர்கள் அவற்றின் இயல் பாதுகாவலர்கள் ஆகும். எனது கோரிக்கை மறு ஆய்வு பற்றிய இன்றியமையாமை குறித்ததேயாகும்.

பல்கலைக் கழகங்களுக்கென்று வரையறை செய்யப்பட்ட பணிகள் பெரும்பாலும் ஒரே வகையானவையே என்றாலும், அதன் அமைப்பு, ஆற்றல் ஆகியவற்றால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கென்று தனிப் பணியுள்ளது. இப்பல்கலைக் கலகத்தினை நிறுவியவரின் பெருந்தன்மை இங்கும் எங்கும் உள்ள பேரறிஞர்களின் மதிப்பினைப் பெறச் செய்துள்ளது. ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரின் எண்ணத்தினையும் முனைப்பாற்றலையும் பகுத்துப் பார்ப்போமானால், இவ்விடம்

கல்விக்கூடமாக மட்டுமல்லாமல், தமிழ் மக்கள், தமிழ் பண்பாடு ஆகியவற்றின் ஆராய்ச்சிக் கூடமாகவும் விளங்கவே விரும்பினர் என்பதை நாம் கண்கூடாகக் காண இயலும். "தமிழர்கள் தங்கள் தனித் திறமையினைப் பேணி வளர்க்கப் போகின்றனர்." என்பதை முன்கூட்டியே அவர் உணரலானர். அதன் காரணமாகவே, தமிழிசை இயக்கத்தைத் துவக்கி, அதனை அவர் வெற்றிபெறச் செய்தார். ஒருபொழுதும் சுவைக்குதவாப் பேச்சு பேசுபவர் அல்லர் அவர்; திண்ணிய பணியில் நம்பிக்கையுள்ளவர். நம்முடைய வரலாற்றினையும் இலக்கியத்தினையும், பண்பாட்டினையும், நாகரிகத்தினையும் நுணுகி ஆராயக் காலம் வரும் என்றும், உலக மன்றத்தில் ஏற்றமிகு ஏற்பை பெறுவதில் வெற்றி பெறுவதற்குரிய காலம் வரும் என்றும் அவர் அறியலானர்.

இலக்கியத்துறையில் நமது அருஞ்செயல் உண்மையில் சிறந்ததாகும். உலகிற்குப் பறை சாற்றும் வகையில் தமிழர்களாகிய நாம் இவற்றைப் பெற்றுள்ளோம்.

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தோர் ஏத்தும் கலியோ டகம்புறமென்
றித்திறத்த எட்டுத்தொகை"

—எட்டுத்தொகை விளக்கப்பாடல்

தவிர, முழு மனிதச் சமுதாயத்திற்கும் நன்னெறியாகவுள்ள அரும்பெருந் திருக்குறளை உலகுக்கு அளிப்பது பற்றி, நாம் பொருத்தருளத்தக்க பெருமிதத்தினையும் பேருவகையினையும் கொள்ள இயலும்.

இருப்பினும், இத்தமிழ் இலக்கியங்களில் நாம் போதிய கவனம் செலுத்துகிறோமா? கடந்த பத்தாண்டுகள் வரை இல்லை என்றே சொல்ல வேண்டும்.

1943-ஆம் ஆண்டு இங்கு ஆற்றிய பட்டமளிப்பு விழா உரையில் நம் இரங்கலுக்குரிய காலஞ்சென்ற சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் கூறியது பின் வருமாறு:

“ தமிழ்ப் பண்பாடு, வரலாறு ஆகியவற்றை முழுதும் அறியாமலேயே நான் பட்டம் பெற்றேன். உண்மையில் நான் அவற்றை அதிகம் புறக்கணித்தேன். ஐரோப்பியப் பண்பாட்டு வரலாறு, ஆங்கில இலக்கியம் ஆகியவற்றில் நான் போதிய திறமை பெற்றேன். கோதிக், ஆங்கிலோ-சாக்சன் ஆகிய மொழிகள் பற்றியும் நான் ஓரளவு அறிந்தேன். பேராயர் உல்பியாஸ் கோதிக் மொழியில் மொழி பெயர்த்த விவிலியத்தைப் படித்தேன். ஆனால், திருவள்ளுவரின் குறளை நான் படிக்கவில்லை. சாசரை நான் அறிய முடிந்தது. ஆனால், இளங்கோவின் பெயர் பெயராக மட்டுமே எனக்குத் தெரிந்தது. கல்லூரியை விட்ட பின்னரும், இவற்றை எல்லாம் படிப்பதில் புத்தார்வங் காட்டினேன். தமிழ்நூல் ஒன்றுகூட இல்லாத ஒரு நூலகத்தை அமைத்தேன்.

என் இளமையின் தொடக்ககாலத்தில் பொறுப்புணர்ச்சி இல்லாமல் என்னுடைய உலகில் நான் வாழ்ந்தபொழுது, இவையெல்லாம் ஒரு வேறுபாடாகத் தோன்றவில்லை. என்னுடைய கல்வி பற்றிப் பெருமை கொண்டேன். கவலைகளுக்கும் சிக்கல்களுக்குமுரிய மனிதப் பருவம் விரைவில் வந்த பொழுது, என்னுடைய இல்லத்திலேயே நான் ஓர் அயலான் என்பதைக் கண்டேன். படிப்படியாக என்னுடைய வாழ்க்கைத் திட்டத்தின் பொருந்தாக் கூற்றை நான் உணரத் தொடங்கினேன். இப்பொழுதிலிருந்து சிறிது காலமாகச் சமநிலையை அடைய முயன்று வருகிறேன். சில ஆண்டுகளுக்கு முன்பே, தமிழ் இலக்கியங்கள் சிலவற்றைச் சீரிய முயற்சியோடு படிக்க முயன்றேன். உலகின் இறவா இலக்கியங்களோடு வைத்து எண்ணத்தக்கவை அவை என்பதை நான் அறிகிறேன். என்னுடைய நாட்டின் அறிவுக் கருவூலங்களையே புறக்கணித்தமைக்காக நான் இப்போது கசந்து வருந்துகிறேன்.”

அது ஒரு வருத்த உரையன்று; ஒரு புதிய உறுதிப்பாட்டின் வெளிப்பாடு. சர். ஆர். கே. சண்முகம் இவ்வுண்மையினை நிலைநாட்ட வாழ்ந்தார். தமிழ்மொழியை மட்டுமல்லாது

தமிழ் இலக்கியத்தினையும் தேர்ந்து தெளிந்து கற்ருர். இன்னுஞ் சில ஆண்டுகள் அவர் வாழ்ந்திருப்பாரேயானுல், தமிழ் இலக்கியங்களின் செய்தியினைச் சுமந்த வண்ணம் உலகின் பல நாடுகளுக்கும் சென்றிருப்பார். கடந்த பழம் பெருங் காலத்தைப் பற்றிப் பேசப்பட்ட செய்திதான் என்ன?

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"

—திருமந்திரம் (2066)

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

— புறம் (192)

"வினையே ஆடவர்க்கு உயிரே"

— குறுந்தொகை (135)

"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்"

— புறம் (195)

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை; வாழிய நலனே!"

— புறம் (187)

"செல்வத்துப் பயனே ஈதல்;"

— புறம் (189)

"தீதும் நன்றும் பிறர்தர வாரா"

— புறம் (192)

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை"

— குறள் (322)

இப்பாடல்களில் அமைந்துள்ள கருத்துக்கள் இப்பொழுது உலகின்முன் இக்காலத்தின் மலர்களென வைக்கப்படுகின்றன.

7

அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பட்டதாரிகளே! முழு உலகிற்கும் நம் இலக்கியங்களின் செய்தியினை எடுத்துச் செல்லும் தனிப் பொறுப்பினை ஏற்க வேண்டியுள்ளீர்கள்

இங்கு மிகப் பழமையுடையது, இன்று மிகத் தற்காலத்தது என்று அறிமுகப் படுத்தப்படுகிறது என்பதனை நீங்கள் அறிவிக்க வேண்டி உள்ளீர்கள்.

மிகப் பழமை வாய்ந்த பண்பாட்டின் தாயகம் தென்னிந்தியா ஆகும். நீண்ட காலமாக அடர்ந்து பரவியுள்ள அறியாமை இருள் இருந்த போதிலும், கிறித்து பிறப்பதற்கு ஈராயிரம், மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே மிக உயர்ந்தோங்கி வளர்ந்த திராவிட நாகரிகம் இருந்தது என்பதனை எல்லோரும் இப்பொழுது ஏற்றுக்கொண்டுள்ளனர். நுண்ணிய கருத்தினையுந் தெரிவிக்கும் கருவியாகத் தமிழ்மொழி செம்மையாக வளர்ந்தமைக்கும், அதன் இலக்கிய அழகுக்கும் செழுமைக்கும் பல அயல் நாட்டறிஞர்கள் சான்று பகர்கின்றனர். ஆகவே, திரவிட இலக்கியம், மெய்யறிவியல், கலை, சிற்பம் ஆகியவை திறன்மிகு ஆராய்ச்சிக்குச் சிறந்த பயனுள்ள துறைகளாக இலங்குகின்றன.

வெறும் புகழுக்காக மட்டுமல்லாமல், நம் பண்டைய மரபு வழியில் உண்மைப் பயனும் அழகுமுள்ள எல்லாவற்றையும் நேரிய முறையில் பாராட்டவே இந்த ஆய்வும் ஆராய்ச்சியும் நமக்குத் தேவை.

அரசியல் அரங்கில் உங்கள் பொறுப்பு பற்றி நான் பேசப் போவதில்லை. மக்களாட்சியினை நிலையானதாகவும் நிறைவுள்ளதாகவும் நலமும் நற்பயனும் தருவதாகவும் நீங்கள் செய்யவேண்டும் என்று கூறினால் அதுபோதும் என நினைக்கிறேன்.

இப்பல்கலைக் கழகம் உங்களுக்களித்துள்ள செய்தியினை நீங்கள் எங்குச் சென்றாலும் எங்கிருந்தாலும் எடுத்துச் செல்லுங்கள். பாமரனை-சராசரி மனிதனை-உயர்த்துங்கள். இந்நாட்டுக்கு மட்டுமன்று, மற்ற எல்லா நாடுகளுக்கும் அவன் முதுகெலும்பாவான். அச்சராசரி மனிதனின் சொல்லோவியத்தை உங்கள் முன் அளித்திட அனுமதி வேண்டுகிறேன்.

"அவன் நம்ப முடியாதவன் போல் காணப்படுகிறான். ஆனால், மனிதகுலத்தில் மூன்றில் இரண்டு பங்காவான். அவன் குடிசையில் வாழ்கிறான். அவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அவனது ஆற்றலை நோய் உறிஞ்சிவிட்டது. ஒரு நாளைக்கு அவன் 15 மணி நேரம் உழைக்கிறான். அதுவும் தனக்குச் சொந்தமல்லாத நிலத்தில், அவன் தனது குடும்பத்துடன் வழக்கமாகப் பட்டினியால் வாடுபவனே. இளமையிலேயே அவன் சாவான். ஆனால், அவன் தன்னுடைய குழந்தைகளுக்கு நம்பிக்கைகளையும் வைத்துள்ளான். அவர்கள் உடல் நலமும் வலிமையையும் உடையவர்கள்; எழுதப்படிக்கக் கூடியவர்கள் என்பதே அந்நம்பிக்கைகள். அமைதியான உலகத்தில் தனியாள் உரிமையினை அவன் அறிவான். இத்தகையவனே உலகச் சராசரி மனிதன்".

உலக முழுதும், இச்சராசரி மனிதன் தனக்குச் செய்யப் படும் அநீதியினைக் அறிந்தவண்ணம் உள்ளான். அதன் விளைவாகப் போராட்டங்கள் பேரணிகள், மோதல்கள், சண்டைச்சச்சரவுகள் ஆகியவற்றை நாம் காணுகிறோம். பல நாடுகளில் அவனது நிலையினை உயர்த்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

"நாங்கள் பின்வாங்க மாட்டோம். சராசரி மனிதனைக் கைவிடமாட்டோம்". என்று இங்கே இப்பொழுதே நீங்கள் உறுதிமொழி கூறுங்கள். அடிப்படை ஆட்டங்கொடுக்குமானால், அணிமாடம் அழிவுறும். உயர்ந்த மரபுவழி வந்தவர்களாக இருப்பதால் இச்சீரிய பணியினைச் செய்ய நீங்களே சாலத்தகுதியுடையவர்கள். இந்நாட்டின் எதிர்காலமும் ஏனைய நாடுகளின் எதிர்காலமும் அப்பணியின் வெற்றியைப் பொறுத்தே அமையும்.

உட்ரோ வில்சன் கூறியதை இங்கு நினைவு கூர்வோம்:

"நாடுகள் அடிமட்டத்திலிருந்தே புதிப்பிக்கப்படுகின்றன, மேல் மட்டத்திலிருந்து அன்று. சாதாரண மனிதனின் பட்டறிவுகளிலிருந்து மனித வாழ்க்கையின் மெய்

யறிவு ஆக்கப்படுகிறது. ஒரு பெருமரத்தின் இயற்கை வளர்ச்சி மண்ணிலிருந்து அதன் அடித்தண்டு வழியாகக் கிளைகளை அடைந்து, பின் இலைக்கும் கனிக்கும் பரவுவது போல், வாழ்வின் வலிமையும் பயனும் ஏற்படுகின்றன. பெரும் போராட்டம் நடத்தும், இனந்தெரியாத மனிதக் கூட்டங்களே ஒவ்வொன்றின் அடிப்படையிலும் உள்ளன. இவையே சமுதாய நிலையினை மேல் மட்டத்திற்கு உயர்த்தும் இயக்க ஆற்றலாக அமைகின்றன. ஒரு நாட்டின் பெருமை அதன் பொது நிலையாளர்களின் பெருமையைப் போலவே உள்ளது.''

இப்பல்கலைக் கழகத்திருந்து மலர்ந்து செல்லும் இளைஞர்களாகிய உங்கட்கு எனது வேண்டுகோளினைத் தெரிவிக்கட்டுமா?

உறுதியாக இருங்கள், ஆனால், விடாப்பிடியாக இராதீர். கருத்துக் கலவை இருக்கட்டும். ஆனால், ஒருபொழுதும் மலிவான தழுவலும் ஊறுதரத்தக்க கலப்படமும் இருக்கக் கூடாது. பழுதுபட்ட கருத்துக்கள் நெறிமுறைகள் என்று தவறாகக் கருதாதீர்; எச்சரிக்கையாக இருப்பீர். வெறியினை வாய்மையாகக் கருதாதீர். ஒரு கருத்துத் தொகுப்பை நாடுங்கள். அடிமைக்காட்படுவதை அகற்றுங்கள். அநீதிக்கு எதிராகப் போராடத் தவறாதீர். ஆனால், உங்கள் கருத்தினை இறுதியானது என்று வெளிக்காட்டாதீர். பண்டைய தமிழ் முதுமொழியினை மறக்காதீர்.

நீங்கள் கூறுவதை நடைமுறையாக்கத் தயங்காதீர். இம்மாபெரும் பணியினைச் செய்வதற்குரிய அடிப்படைத் தேவைகளை உங்களுக்களிப்பது பல்கலைக் கழகக் கல்வியே. ஆனால், அதுமட்டுமே போதாது. இதனை இலிங்கன் பிட்டியின் வழி கூறுவோம்.

நான் பயில்கின்றேன், ஆய்கின்றேன்
நான் தேர்வு செய்கின்றேன், ஓர்கின்றேன்
நான் சிந்தனை செய்கின்றேன்
இவையெல்லாவற்றின் விளைவாக
நான் ஒரு கருத்தை உருவாக்க முயலுகிறேன்
அதில் என்னுலியன்ற பொது அறிவைச்
சேர்க்கின்றேன்.

அகப் பயணமே நீண்ட நெடிய பயணம் என்பதை நினைவுகூருங்கள். அப்பயணத்தின் தொடக்கப்புள்ளியே பட்டம் பெறுதல். நீங்கள் வெற்றிபெற என் வாழ்த்துக்கள்!

இலக்கினை அடையுங்கள். மற்றவர்களும் அவ்விலக்கினை அடைய அறிவு கொளுத்துங்கள், அவ்விலக்கு இதுவே.

கையேந்தாப் பிச்சைக்காரர்
கஞ்சரின் கன்னெஞ்சம்
ஒற் பார்வை
தேவையின் தவிப்பு
குற்றத்தின் குறுகுறுத்த முகம்
பொய்யுரைக்குஞ் சீற்ற உதடுகள்
ஏளனத்திற்குரிய கொடிய கண்கள்
இவை இல்லா உலகம்
ஊனில் நோய்தொடியில்லா இனம்
வடிவழகுள்ள மூளை
வடிவமும் பயனும் ஒருமித்த இணைப்பு
எங்கு வாழ்வு நீடிக்கிறதோ
எங்கு அச்சம் மடிகிறதோ
இன்பம் ஆழமாகிறதோ
அன்பு அடர்வுறுகிறதோ
அங்கு மனிதன்
தன் மாண்பினை மீண்டும் பெறுகிறான்.

இச்செயல்களைப் பெற்றிடத் திருவள்ளுவர் தெள்ளிதின் கூறிய இலக்கு நோக்கி நாம் ஏகுவோம்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

இந் நோக்கத்துடன், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உங்களைப் பரந்த உலகிற்கு அனுப்புகிறது என்னும் நம்பிக்கை உடையேன் நான். நீங்கள் வெற்றி பெறுவீர். ஏனெனில், இந்நிறுவனம் உங்களுக்களித்துள்ள ஆற்றலால், நீங்களே போதிய அளவு தகுதி பெற்றுள்ளீர்கள்.

உங்களுடைய வாழ்வு ஒளி நிரம்பியதாக இருக்கட்டும். அதன் ஒளி நாடுமுழுவதையும் ஒளிரச் செய்யட்டும். எனது பாராட்டுக்களை ஏற்றுக்கொள்ளுங்கள். புன்னகைபுரி நோக்கி ஏறுநடை போடுங்கள்.

**வகைப்பாடு :** கல்வி-பல்கலைக் கழகத்தின் பணி

[18—11—67 அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய ஆங்கிலப் பட்டமளிப்பு விழா உரையின் தமிழாக்கம்].

# அண்ணாவின் அறிவு மொழிகள்

அடக்குமுறைகள் எல்லாம் விளையாட்டுக் கருவிகளே
அழகு ஓர் ஆபத்தான ஆயுதம்.
அறிவிப்பு சாதனையல்ல.
அன்பைவிடப் பெரியது உலகில் ஒன்றுமில்லை.
இது பாமரனின் காலம்.
இப்படை தோற்கின் எப்படை வெல்லும் !
எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.
ஏமாற்றத்தின் விளைவே சினம்.
ஏழைகளுக்கு உதவுவது நாட்டுக்கு உதவுவது ஆகும்.
ஏழையின் சிரிப்பிலே இறைவன்.
ஒரு நாட்டின் உயிர் அதன் பண்பாட்டிலே.
கட்டாயம் எப்பொழுதும் எதிர்ப்பைத் தோற்றுவிக்கும்.
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு.
கத்தியைத் தீட்டாதே; புத்தியைத் தீட்டு.
கதை என்பது கட்டுவதுதானே !
கருத்து சிந்தனையின் விளைவு
கவிதையின் அடிப்படை உணர்வுப் பெருக்கு.
காலம் என்னுஞ் சிறையிலிருந்து தன்னை விடுதலை செய்து கொள்ளாதவன் சிறந்த கவியாகான்.
சட்டம் ஓர் இருட்டறை; அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு.

சர்வாதிகாரம் ஒரு காட்டுத்தீ.

சாலை ஓரத்திலே வேலையற்றதுகள். வேலையற்றதுகளின் உள்ளத்திலே விபரீத எண்ணங்கள். அது தான் காலத்தின் குறி!

நடந்ததை நடந்தவாறு உரைப்பது இதழ் அறம்.

நல்லவன் வாழ்வான்.

நீதியே நிலையானது; தீர்ப்பன்று.

பண்பாடு நிலையானது.

பூகோளத்துடன் விஞ்ஞானம் சேரவில்லை என்றால் குயஸ்கால்வாய் ஏது.

பொது வாழ்விலே எரிமலை, அலைகடல், பூகம்பம் தீ எல்லாம் உண்டு?

போர் மனிதப் பண்புகளுக்கு நேர்மாறானது.

மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு.

மக்களாட்சி ஒரு வீட்டு விளக்கு.

மறப்போம்; மன்னிப்போம்.

மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு.

மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.

முணுமுணுப்பு இன்று இடி முழக்கமாகிவிட்டது.

முத்தமிழ் என்றால் அது முக்கனித் தோட்டம்.

மொழி காக்கப்படவேண்டும், இனம் அழிந்து விடாமல் இருக்க.

விடாமுயற்சி இருந்தால் வெற்றி கிடைத்தே தீரும்.

வீட்டிற்கோர் புத்தகசாலை நாட்டுக்கு நலந்தரும்.

# பொருள் முதற்குறிப்பு அகரவரிசை


அடைய வேண்டிய இலக்கு 40-41
அண்ணாமலைப் பல்கலை கழகத்தின் தனிப் பணி 33
அந்நாள் நிகழ்ச்சியின் ஆணை 4
ஆங்கில மொழியறிவின் இன்றியமையாமை 15, 16, 31
ஆங்கிலோ-சாக்சன் 35
ஆட்சி மொழி 15
ஆராய்ச்சியின் இன்றியமையாமை 37
ஆல்பர்ட் சுவைசர் கருத்து 26
இணைப்பு மொழி 15
இந்தி இணைப்பு மொழி 16
இராதாகிருட்டிணன் கருத்து 22
இலம்பயிட்டி கருத்து 39-40
இளங்கோ 35
இளைஞர் பொறுப்பு 1
இளைஞருக்கு அண்ணா கோரிக்கை 39
ஈயாஸ் விருப்பம் 28
உட்ரோ வில்சன் கருத்து 38
உலிபியாஸ் 35
உலகிற்குப் பறைசாற்றும் தமிழ் இலக்கியங்கள் 35
உழைப்போரின் உன்னத பணி 24
எமர்சன் 32
கிளர்ச்சிக்குரிய காரணம் 38
கிளப் வாலா ஜதாவ் 1
கீட்சு 32
குறிக்கோள் தெளிவு 12
குறிக்கோளற்ற நிலையின் குழப்பங்கள் 11
கோதிக் 35
கோல்ரிட்ஜ் 32
சமுதாயச் சீர்திருத்தம் X சமூகச் சேவை 1
சமூகத் தொண்டின் சீர்த்தி 25
சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் கருத்து 34-35
சாசர் 35
சாதியினை எதிர்த்துப் போர் 29
தமிழ் இலக்கியச் செய்தி 36
தமிழ் பயிற்று மொழி 33
தமிழிசை இயக்கம் 34
தனியாள் திறன் 2
திராவிடக் கலைகள் 37
திராவிட நாகரிகம் 37
திருவள்ளுவர் 3, 32, 41
தேசியக் கல்விக்குழுக் கருத்து 6
நக்கீரர் 4
நம் காலத்தின் விந்தை இயல்பு 30-31
நாட்டின் ஒருமைப்பாடு 31

நாட்டின் குறிக்கோள் 13,14
நாட்டின் நிலை 1-2
நாட்டுச் சிக்கல்கள் 26,27
பகுத்தறிவு இலக்கணம் 30
பட்டம் பெறும் நோக்கம்
5,7,12
பட்டதாரியின் உடனடி
நோக்கம் 23
பட்டதாரியின் சமூகக்
கடப்பாடு
23-26,29-30
பட்டதாரிகளின் பணி
9-11,36-38
பயிற்று மொழி 15
பல்கலைக் கழகங்களின்
இயல்பு 19
பல்கலைக் கழகக் கல்வி
இலக்கணம் 38
பல்கலைக்கழகக் கல்வியின்
நன்மை 39
பல்கலைக் கழகங்கள்
தோன்றிய நிலை 8,9,
பல்கலைக் கழக நடப்பு
மறு ஆய்வு 20,21,38
பல்கலைக் கழக
நோக்கம் 6-7,9
பல்கலைக் கழகங்களின்
பணி 20,28
பல்கலைக் கழக வளர்ச்சியில்
ஏழையரின்
(உழைப்போரின்)பங்கு 18
பாடத்திட்டம் பயிற்சி
முறை 12
பாடமொழி 15
பாமரன் காலன்
(சராசரி மனிதன்) 19
பாமரன் பற்றிய
சொல்லோவியம் 38
பாமரனை உயர்த்துதல் 38
பாரதிதாசன் 12
பாரதியார் 8
பெரியார் இராமசாமி 29
பேக்கன் 32
பைரன் 32
மக்களாட்சி இலக்கணம் 22
மக்களாட்சியில்
கலந்துரையாடல் 22
மதுரைச் சிறப்பு 4
மதுரைப் பல்கலைக்கழகத்
தனிப் பணி 9-10
மதுரை மனக்கண்
காட்சி 3
மாடக் கூடல் 3
மாணவர் உணர
வேண்டியது 13,16,17
மாணவர் நல்லியல்புகள்
காரணம் 11-12
மொழிச் சிக்கல் 15,31
ராஜாசர் அண்ணாமலை
எண்ணம் 33
ராஜாஜி கருத்து 30
வரலாறு காட்டுவது 13
ஜெபர்சன் கருத்து 24
ஷெல்லி 32

# அண்ணாவின் பேச்சு வரிசை

## அடுத்து வெளிவருபவை

அண்ணாவின் துவக்க உரைகள்

அண்ணாவின் பாராட்டுரைகள்

அண்ணாவின் வானொலி உரைகள்

அண்ணாவின் பொது உரைகள்

அண்ணாவின் சட்டமன்ற உரைகள்

# அண்ணாவின் அறிக்கைகள்

## 1. சென்று வருகிறேன்

மலேசியத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும், தமிழ்ப் பண்பாட்டில் அக்கறை கொண்ட அன்பர்களும், இதழாசிரியர் களும் பல ஆண்டுகளாக நான் அங்கு வந்திருந்து, அளவளாவி, அகமகிழ்ச்சி பெற்றிட வேண்டுமென்று விரும்பி அன்பழைப்புத் தந்து வந்தனர்.

இப்போதுதான் மலேசியா செல்வதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டிட முடிந்திருக்கிறது - சென்று வருகிறேன்.

"மலேசியாவில் தமிழர்கள் குடியுரிமை பெற்று, மலேசியக் காரர்களாகியுள்ளனர். மேலும் பலர், அந்நிலை பெற்றிட விழைவு கொண்டுள்ளனர். உழைத்துத் தம் வாழ்வினைச் செம்மைப் படுத்திக் கொண்டுள்ளனர். அதனை நேரிலே வந்து கண்டு களிப்பினைப் பெறுவீர்" என்று கனிவுடன் அழைத்துள்ளார்கள்.

'என்பும் உரியர் பிறர்க்கு' எனும் மரபுதித்த இன்தமிழர் - என்நாடு இந்நாடு; பொன்னாடாக ஈந்திடுவேன் என் உழைப்பை; என்று இதயம் கனிந்து கூறி மலேசியராகித் திகழ்கிறாரே, - அவர்தம அன்பு மொழி கேட்க. இன்பமுகம் காணச் செல்கிறேன்.

16.7.65 காலை, என தம்பி இரா. செழியன், எம்.பி. அவர்களுடன் மலேசியா சென்றுவரப் புறப்படுகிறேன்.

மலேசியப் பயணத்தை முடித்துக் கொண்டு, தாய்லாந்து, ஹாங்காங், ஜப்பான், பிலிப்பைன்ஸ், கம்போடியா, பர்மா எனும் நாடுகளைக் காணத் திட்டம் மேற்கொண்டுள்ளேன்.

மூன்று கிழமைகளில் எல்லா இடங்களையும் கண்டு திரும்பிவிடும் விருப்பம் கொண்டுள்ளேன்; அவ்வப்போது செய்தி தருகின்றேன்.

மலேசியா சென்று வருகிறேன். உமது நல்வாழ்த்துத் துணை நிற்கும் நிலையிலே!

மலேசியாவில் பலநகரங்களில் வரவேற்பு விழாக்களும், பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்துள்ளனர்.

சிங்கப்பூர், கோலாலம்பூர், பினாங்கு, ஈப்போ, சிரம்பான் போன்ற நகரங்களில் நிகழ்ச்சிகள் ஏற்பாடாகியுள்ளன.

சிங்கப்பூரில் ஏற்பாடாகியுள்ள சிறப்பு நிகழ்ச்சிமூலம் பெறப்படும் தொகையினை, சிங்கப்பூர்ப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பிரிவுக்குத் தருவது என்று சீரிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மற்ற நகரங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகள் பெரிதும் வரவேற்பு விழாக்களாகவும், பொதுக்கூட்டங்களாகவும் அமைந்துள்ளன என்று அறிந்து அகமகிழ்கின்றேன்.

மலேசியா வரவேண்டும் என்பதிலே துவக்க முதல் மெத்த ஆர்வம் காட்டி என்னை ஊக்குவித்து வரும் 'தமிழ் மலர்' ஆசிரியர் செல்வகணபதி அவர்களும், அலுவலகத்தில் உள்ள மற்ற நண்பர்களும், அதுபோன்றே நீண்ட பல ஆண்டுகளாக மலேசியாவாழ் தமிழவேள் திரு. சாரங்கபாணி அவர்களும், அவர் நடத்தும் 'தமிழ்முரசு' நாளிதழ் அலுவலகத்தினரும், 'தமிழ்நேசன்' ஆசிரியர் அன்பர் முருகு சுப்பிரமணியமும், அவர்தம் தோழர்களும், தமிழர் பிரதிநிதித்துவ சபையில் ஈடபாடு கொண்ட நண்பர்களும் என்னை உள்ளன்புடன் அழைத்துள்ளனர்; உடனிருந்து மகிழ்ச்சி வழங்கிடுவர்.

வள்ளல் அரங்கசாமி அவர்கள், இராமநாதபுரம் திருப்பத்தூர்க் காரர் - அவருடைய அன்பழைப்பும் கிடைக்கப் பெற்றுள்ளேன்.

மற்றும் பலர், எனக்கு அறிமுகமாகாதவர்கள், ஆயினும் இதயத்தில் எனக்கு இடமளித்துள்ளவர்கள். கடித மூலம் கனிவுடன் அழைப்பு விடுத்துள்ளனர்.

அவர்கள் அனைவரையும் கண்டு மகிழ்ந்திடவும், உரையாடி உற்சாகம் பெற்றிடவும், உடனிருந்து அளவளாவிடவும், ஒரு திங்கள் முழுவதும் அங்கு இருந்தாலும் போதாது; எனினும், இங்குள்ள அலுவல்களைக் கணக்கிடும் போது பதினைந்து நாட்கள் மட்டுமே மலேசிய நிகழ்ச்சிகளுக்கெனக் குறித்திட முடிகிறது.

மலேசிய அமைச்சர் மதிப்புமிகு திரு. சம்பந்தம் அவர்கள் நான் அங்கு வருவது குறித்துச் சிற்சிலருக்கு ஏற்பட்ட ஐயப் பாட்டினை நீக்கி, நான் அங்கு வருவதனை வரவேற்றிருக்கிறார்கள். அந்த அன்புள்ளம் கொண்டவருடன் அளவளாவி மகிழ்ந்திடும் நல்வாய்ப்பும் பெற்றிட விழைகின்றேன்.

தொடக்கத்தில் துளிர்விட்ட எதிர்ப்புக் கலைந்தது கேட்டுப் பெரிதும் மகிழ்கிறேன்.

நான் அங்குச் செல்வது அங்குள்ள நிலைமையினைக் கண்டிட; கெடுத்திட அல்ல;

என் பயணம், காண - கேட்க - களித்திட - கருத்துப் பெற; கசப்புணர்ச்சியூட்டிட அல்ல; அஃது என் இயல்பும் அல்ல!

மலேசியப் பயணத்தை முடித்துக் கொண்டு, தாய்லாந்து, ஹாங்காங், ஜப்பான், பிலிப்பைன்ஸ், கம்போடியா, பர்மா எனம் நாடுகளைக் காணத் திட்டம் மேற்கொண்டுள்ளேன்.

மலேசியாவின் அரசியல் பிரச்சினைகளை - பல்வேறு நாட்டுப் பிரச்சினைகளைக் கற்றறிந்திட விழைந்திடும் மாணவன்போல் - அறிந்து கொள்ளச் செல்கின்றேன், பங்கேற்க அல்ல.

அதுபோன்றே, இங்கு நான் முழுக்க முழுக்க ஈடுபட்டுள்ள அரசியல் பிரச்சினைகளை அங்குக் கடைவிரித்துக் கூறிடுவேனா, நான்? - பண்பு எனும் வரம்பறிவேன் - பணியாற்றும் முறையும் அறிவேன். இங்குள்ள அரசியலை அங்கு எடுத்து இயம்பிடுதல் பொருத்தமற்றது என்ற பொறுப்பினை உணர்ந்துள்ளேன்.

அன்பன்
அண்ணாதுரை
15-7-65 நம்நாடு

## ஒரு துளித் தண்ணீர் பெறும் வலிவு

"கடலுக்குள்ள வலிமை ஒரு துளி தண்ணீருக்கு இல்லையே ஏன்?" என்று கௌதம புத்தரிடத்தில் ஒரு நாள் அவருடைய சீடர் ஒருவர் கேட்டார்.

"அதற்குப் புத்தர் பதிலளிக்கையில், அந்த ஒரு துளித் தண்ணீர் கடலுடன் கலந்து விட்டால், கடலின் வலிவு அத்தனையும் அந்த ஒரு துளித் தண்ணீருக்குக் கிடைத்து விடும்", என்றார்.

"அதுபோல, இந்நாட்டில் வாழும் பத்து இலட்சம் தமிழ் மக்களும் இந்நாட்டுடன் இரண்டறக் கலந்து விட்டால் மலேசியா வலிவடைந்து விடும்."

-ஜோகூர் ஸ்டேடியத்தில் அண்ணா பேச்சு

# 2. அண்ணா - இராஜாஜி வேண்டுகோள்

காங்கிரஸ் அல்லாத அரசுகளைக் கவிழ்த்துவிட இந்தியப் பேரரசை நடத்துங் காங்கிரஸ் கட்சி திட்டமிட்டு வேலை செய்து பல இடங்களில் குடியரசுத்தலைவர் ஆட்சியைப் புகுத்திவிட்டது. தமிழகத்தில் அமைத்துள்ள அரசையும் எப்படியும் கவிழ்த்து விடலாம். இங்குக் குடியரசுத்தலைவர் ஆட்சியைப் புகுத்தி விடவும் அவர்கள் விரும்புகிறார்கள்

தமிழகத்தில் இப்பொழுதுள்ள அரசு கவிழ்க்கப்பட்டுக் குடியரசுத்தலைவரின் ஆட்சி புகுத்தப்படுமானால், இந்தி ஆதிக்க எதிர்ப்பு அரசு கலைக்கப்பட்டு, இந்தி ஆதரவு அரசு அமைக்கப்பட்டுவிடும். இந்த நிலையை இந்தி ஆதிக்கத்தைப் புகுத்தத் திட்டமிட்டோர் விரும்புகிறார்கள். இந்த நிலையை உண்டாக்க, அவர்களிடம் என்னென்ன கிளர்ச்சிகளை மூட்டிவிடலாம் என ஆவலுடன் தேடுகின்றனர்.

"தமிழக அரசு சட்டம் சமாதானம் கெட்டுப் போகத் துணை செய்கிறது" என்றும் "வன்முறைகளை வளர்த்துவிடுகிறது" என்றும் "நாட்டைத் துண்டாடத் தூபமிடுகிறது" என்றும் பழி சுமத்தி இதனைக் காரணமாகக் காட்டித் தமிழகத்து திமுக அரசைக் கவிழ்த்துவிட விரும்புகிறார்கள்.

மொழிப் பிரச்சினையில் உணர்ச்சி கொண்டுள்ள மாணவர் களால் கோவையிலும் மற்றும் சில இடங்களிலும் உள்ள பகுதியினர் தேசியக் கொடியை எரிப்பது, தனித்தமிழ்நாடு தீர்மானம் போடுவது, தனித்தமிழ் நாட்டுக் கொடி ஏற்றுவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டது அவர்களுக்கு உதவியாக இருக்கிறது. இந்தச் செயல்களைத் தொடரும்படித் தூண்டிவிட்டு இதையே காரணமாகக் காட்டித் தமிழக அரசைக் கவிழ்க்கத் திட்டம் போட்டு இருப்பதாகத் தெரிகிறது.

நாட்டுப் பிரிவினைக்கா நாம் இந்தி எதிர்ப்பு நடத்தவில்லை. இந்தியைப் புகுத்தக் கூடாது என்று நாம் கூறும்போது நாடு பிளவுபடக் கூடாது என்பதுடன் சேர்த்தே கூறுகிறோம். இதனை அறிந்தும் மாணவர்களில் ஒரு பகுதியினர் 'எந்தப் பழிசுமத்தித் தமிழக அரசைக் கவிழ்க்கலாம்' என்று இந்திய ஆதிக்கத்தினர் திட்டமிடுகின்றார்களோ, அந்தத் திட்டத்துக்குத் தங்களையும் அறியாமல் துணை செய்வதை உணர வேண்டுகிறோம்.

தமிழக அரசு கவிழ்க்கப்படுமானால், அது இந்தி ஆதிக்க எதிர்ப்பு உணர்ச்சிக்கே அழிவை உண்டாக்குவது ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். மொழிப் பிரச்சினையில் இன்றுள்ள மைய அரசுக்குத் துணை நின்றே நாம் நியாயத்தைப் பெற முடியும் என்று எடுத்துக் கூற விரும்புகிறோம்.

தேசியக் கொடி எரித்தல், தனித்தமிழ்நாடு கிளர்ச்சி போன்றவை நடத்தப்படுவது நமது இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியையே பாழ் படுத்திவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

நன்கு சிந்தித்து மாணவர்கள் எந்தத் தூண்டுதலுக்கும் செவி சாய்க்காமல் தேசியக் கொடி எரித்தல், தமிழ்நாடு தனிநாடு ஆகத் தீர்மானம் போடுதல் போன்ற செயல்களில் ஈடுபடா திருக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

இத்தகைய செயல்களின் மூலம் மொழிப்பிரச்சனை தீராது. நியாயம் கிடைக்காது. நியாயத்தைப் பெறுகிற வரையில் அழுத்தமும் அமைதியும் வன்முறை அற்றதும் நாட்டைப் பிளவுப் படுத்தாததுமான செயல்களில் நமது மாணவர்களின் நலன்களைப் பாதுகாத்திட நாங்கள் உறுதி கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொன்றாய்க் காங்கிரஸ் அல்லாத மாநிலங்களைக் கவிழ்த்துப் பாவக்கறை படிந்த மைய அரசின் கைகள், தமிழக மண்ணில் நிலையான ஆட்சியாக உள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கவிழ்த்துக் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமைத்திட முனைவதாகத் தெரிகிறது. ஐந்து நாட்களுக்கு முன்னேதான் வங்காளத்தில் குடியரசுத்தலைவர் ஆட்சியை பிரகடனப்படுத்தி அறிக்கையில் கையெழுத்திட்ட குடியரசுத் தலைவர் நேற்று உத்திரப் பிரதேசத்தில் தம் ஆட்சியை அமைத்து அறிக்கை வெளியிட்டுள்ளார். இந்த நிலையில் தமிழகத்தில் நிலையாகத்தான் கழக அரசைக் கலைத்துவிடக் காங்கிரசார் முயலுகின்றனர். அதற்கு இடம் கொடுக்கும் எந்தச் செயலையும் தமிழகத்தில் யாரும், குறிப்பாக, மாணவர்கள் செய்திட வேண்டாம்.

இன்றைய தமிழக அரசு நீடித்திருந்தால் மட்டுமே எங்கள் பணி வெற்றிபெற இயலும். ஆகவே, மாணவர்கள் எமது திட்டத்தையும் செயல்திட்டத்தையும் உணர்ந்து, இப்போது அவர்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை நிறுத்தி, அமைதியை மட்டும் தந்திடும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

25-2-68 அன்று அண்ணாவும், இராஜாஜியும் வெளியிட்ட கூட்டு அறிக்கை.

# 3. சிறுசேமிப்பு

தமிழகத் திட்டத்தின் அசல் இலக்கு ரூ.135 கோடி. இதை ரூ.65 கோடிக்குக் குறைத்ததுடன் பெரிய திட்டத்திற்கான நிதி வசதிகளை இந்த அரசு தேடிக் கொண்டாலுங்கூட, மைய அரசின் ஒதுக்கீடு ரூ.42 கோடியாகவே இருந்துவரும் என்றும் மைய அரசு தெரிவித்துள்ளது.

திட்டத்தை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து தமிழக அரசு குறைத்துள்ளது. திட்டத்தின் அளவு ரூ.83 கோடி என அமைத்துள்ளது. இப்போதுள்ள நிலவரத்தில் ரூ.23 கோடி அளவுக்கு நிதி வசதிகளைத் திரட்டிக் கொள்ள இயலும் என்று நிதித்துறை மதிப்பிட்டுள்ளது. மைய அரசு தரும் ரூ.42 கோடியுடன் சேர்த்துத் திட்டத்துக்கு மொத்தம் ரூ.65 கோடி கிடைக்குமென்பதே இப்போதைய நிலை. இந்நிலையில்தான் சிறுசேமிப்புகள் மூலம் இன்னும் அதிகப்படி நிதிவசதிகளைத் தேடிக் கொள்ளும் பொருட்டுப் பொதுமக்களின் ஆதரவை நாடுகிறேன். நிதி வசதிகளைத் திரட்டுவதற்காகப் புது வரிகளை விதிப்பதென்பது அரசுக்கு எளிதுதான். ஆனால், இவ்வாறு செய்வது அறக்கோட்பாடுகளுக்கு இயைந்ததாக இருக்காது. மக்கள் தரும் சிறு சேமிப்புகளைக் கொண்டு திட்டத்துக்கான பணத்தைத் தேடிக் கொள்வது அறமாகும்.

அரசாங்கம் நிதி வசதிகளைக் கோரினால், உடனே மக்களின் மனத்தில் அதிகாரத் தோரணையில் கேட்கிறார்கள் என்ற தவறான எண்ணம் உண்டாகும். எல்லாம் பொது நன்மைக்காக என்று மக்களுக்கு விளக்கமாக எடுத்துரைக்க வேண்டும். பிற்காலத் தலைமுறையினருக்காக, இளம் சந்ததிகளுக்காகத் திட்டங்களை நிறைவேற்ற நிதிவசதி தேவைப்படுகிறது என்பதைத் தெளிவுறுத்த வேண்டும். அப்போது தானாகவே இந்த இயக்கத்தில் வேகம் பிறக்கும்.

-1968-69க்கான தமிழகஅரசுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையை ஈடுசெய்யச் சிறு சேமிப்பை ஊக்குவிக்குமாறு அனைத்து வகையினருக்கும் அண்ணா விடுத்த வேண்டுகோள்.

# 4. தூய போராட்டம்

கிளர்ச்சியையும் நேரடி நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்க வேண்டும் என்னும் வேண்டுகோள் உங்களது உணர்ச்சிகளிலும் போராட்டத்திலும் குறிக்கோளிலும் பொது உணர்விலும் உங்களிடம் ஈடுபாடு உள்ளவர்களிடமிருந்துதான் வருகிறது.

உங்களைக் கடுமையாக இகழ்ந்தும் விடாப்பிடியாகத் தாக்கியும் தொந்தரவு செய்யும் பக்கமிருந்து வரவில்லை என்னும் உண்மையை மாணவர்களாகிய நீங்கள் கவனிக்க வேண்டும்.

இந்தத் தூய போராட்டத்தில் பிடிவாதமாகப் பங்குகொண்டு பணியாற்றும் இராஜாஜி ஏற்கனவே தம்முடைய வேண்டு கோளை விடுத்துள்ளார்.

மாணவர்கள் பால் பரிவுகாட்டும் பத்திரிகையாளர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்தித்திணிப்பைப் பொறுக்காது மாணவர்களைப் போன்றே உறுதியுடன் போராடுவதற்கு முன்வந்துள்ள இத்தகையோரின் வேண்டுகோள்களை நம்பிக்கையுடன் மாணவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

- 10-2-1965இல் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் மாணவர்களுக்கு அண்ணா விடுத்த வேண்டுகோளின் ஒரு பகுதி.

# சீரணி உறுதிமொழி

பைந்தமிழ்நாடு பல்வளம் பெறவும், சமூக நல்ஏற்றம் எய்தவும் எல்லாத்துறைகளிலும் மறுமலர்ச்சி காணவும் நல்ல ஆக்கப் பணிகள் ஆற்ற நம் தமிழகத்தில் நிறுவப் பெற்றுள்ள சீரணியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நான், அதன் நோக்கத்தில் நம்பிக்கையும் கொள்கையில் பற்றும் செயலில் ஈடுபாடும் கொண்டு உள்ளத்தூய்மையோடு காய்தல் உவத்தலின்றிக் கைம்மாறு கருதாமல் கட்டுப்பாட்டோடும், கண்ணியத்தோடும் கடமையாற்றுவேன் என்று மனநிறைவோடு உறுதி கூறுகின்றேன்.

# சனநாயகமும் தனிநாயகமும்

"சனநாயகம் பரவி வரும் வேளையில் உலகில் தனிநாயகமும் விளங்கத்தான் செய்கிறது. தமிழக மண்ணிலே தமிழ் காக்கப் போராடும் நிலையிருக்க, உலகெங்கும் சென்று கன்னித் தமிழின் மென்மையை, இனிமையை - மணத்தைப் பரப்புவதில் உலகிலே ஒரு தனிநாயகம் தோன்றித்தான் உள்ளது. அந்தத் தனிநாயகம் யார் என்றால் இங்கு வீற்றிருந்து தமிழே உயிரென்றும், தமிழ்ப் பணியே வாழ்வென்றும் கருதித் திகழ்ந்துவரும் அடிகளாரே யாவார்.

"அவர் எங்கெங்கு சென்றிடினும் தமிழுக்கென்றே ஒரு தனிநாயகத்தை ஏற்படுத்தி வருகிறார். பெயருக்கேற்ற ஆட்சி, என்னே அவரது பெயர்ப் பொருத்தம்!

-மலேயப் பல்கலைக்கழகத்தில் அண்ணா

"அண்ணாவின் இதயத்திலிருந்து வரும் தமிழின் இனிமை கண்டு அண்ணாவின் மாணவனாக ஆகும் பேறு எனக்குக் கிட்டவில்லையே என வருந்துகிறேன்"

-நன்றியுரையில் தனிநாயகம் அடிகள்



பேரா. அ. கி. மூர்த்தி
(1932– )

சிறந்த எழுத்தாளர்
மதிப்பிற்குரிய கருத்தாளர்
சீரிய பதிப்பாசிரியர்
பரிசுகள் பல பெற்றவர்